بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 10 | இதழ் 29

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரீ கமரீ 1447 - முஹர்ரம் 21 ★ ஹிஜ்ரீ ஷம்ஸி 1404 - வஃபா 17 ★ 2025 ஜூலை 17

## அல்லாஹ்வின் கட்டளை

وَلِلّٰہِ الۡمَشۡرِقُ وَالۡمَغۡرِبُ ٭

فَاَیۡنَمَا تُوَلُّوۡا فَثَمَّ وَجۡہُ اللّٰہِ ؕ

اِنَّ اللّٰہَ وَاسِعٌ عَلِیۡمٌ

**பொருள்**

கிழக்கும், மேற்கும் அல்லாஹ்விற்கே உரியன. எனவே நீங்கள் எத்திசையை நோக்கினாலும் அங்கே அல்லாஹ்வின் கவனமிருக்கும். நிச்சயமாக, அல்லாஹ் வளமாக வழங்குபவனும், மிக்க அறிந்தவனுமாவான். (அல்பக்கரா: 116)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**எனது அடையாளங்களுக்கு முஸ்லிம்கள் மட்டுமே சாட்சிகளாக இல்லை. மாறாக உலகில் எந்த அளவிற்கு சமுதாயங்கள் இருக்கின்றனவோ அவை அனைத்தும் எனது அடையாளங்களுக்கு சாட்சிகள் ஆகும்**
**இதற்காக நான் என் வல்லமை மிக்க இறைவனுக்கு நன்றி செலுத்துகிறேன்**

فالحمدللہ علیٰ ذالك

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான
ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

114. அடையாளம்: பிளேக் நோய் பரவுவது தொடர்பாக

الامراض تشاع والنفوس تُضاع۔

என்ற இல்ஹாம் எனக்கு வந்தது.

பொருள்: நோய்கள் பரப்பப்பட்டு விடும். மேலும் விலங்குகளுக்கு பாதிப்பு ஏற்படும். தற்போது எவர் விரும்புவாரோ அவர் பார்த்துக் கொள்ளட்டும்! நான் இந்த இல்ஹாமை பிளேக் நோய் பரவுவதற்கு முன்பே அல்ஹகம் மற்றும் அல்பத்ர் பத்திரிகைகளில் வெளியிட்டிருந்தேன். பின்னர் அதன் பிறகு பஞ்சாபில் எந்த அளவிற்கு பிளேக் மிகைத்தது என்றால் ஆயிரக்கணக்கான வீடுகள் மரணத்தால் காலியாகிவிட்டன.

115. அடையாளம்: ஸிராஜே முனீர் என்ற நூலில் பிளேக் நோய் வருவது தொடர்பாக இந்தவொரு முன்னறிவிப்பு இருக்கின்றது:

یا مسیح الخلق عدوانا

பொருள்: படைப்பினங்களுக்காக அனுப்பப்பட்டுள்ள அந்த மஸீஹே! (நீர்) எமது பிளேக்கை குறித்து அறிந்து கொள்வீராக! அடுத்து, இதன் பிறகு அதாவது கடுமையான பிளேக் நோய் ஏற்பட்டு மேலும், ஆயிரக்கணக்கான மனிதர்கள் பிளேக்கிற்கு அஞ்சி என் பக்கம் ஓடிவந்தனர். அவர்களது நாவில் . یا مسیح الخلق عدوانا .என்ற சொற்களே இருக்கும் வகையில் அவர்கள் ஓடி வந்தனர். மேலும், இந்த முன்னறிவிப்பு எனது நூல் ஸிராஜே முனீர் என்பதில் இடம்பெற்றுள்ளது. இதே போன்று நூற்றுக்கணக்கான மனிதர்களுக்கு சம்பவம் நிகழ்வதற்கு முன்பே தகவல் கொடுக்கப்பட்டு விட்டது.

116. அடையாளம்: ஒருமுறை ஸுபுஹ் நேரத்தில் இறை வஹீயினால் "அப்துல்லாஹ் கான் டேரா இஸ்மாயீல் கான்" என்ற சொற்களை எனது நாவு உச்சரித்தது.

இந்தப் பெயரைக் கொண்ட ஒரு நபர் இன்று சிறிது பணம் அனுப்புவார் என்ற புரிதல் ஏற்பட்டது. வஹீ அமைப்பின் நிராகரிப்பாளர்களான மேலும் ஏராளமானவற்றை வேதத்துடன் முடித்து வைத்து அமர்ந்திருக்கக் கூடியவர்களுமான சில இந்துக்களிடம் குறிப்பிட்டேன். மேலும், இன்று இந்த பணம் வரவில்லையென்றால் பின்னர் நான் உண்மையில் இல்லை என்று எடுத்துரைத்தேன். அவர்களில் பிராமண சமுதாயத்தைச் சேர்ந்த, இன்றைய நாட்களில் ஓரிடத்தில் கிராம நிர்வாக அதிகாரியாக இருக்கும் பஷன் தாஸ் என்ற ஒருவர் கூறினார்: நான் இந்த விஷயத்தை பரிசோதித்துப் பார்ப்பேன். மேலும், நான் தபால் நிலையத்திற்கு செல்வேன்.

அந்த காலத்தில் காதியானில் தபால் பிற்பகல் 2 மணிக்குப் பிறகு தான் கிடைத்து கொண்டிருந்தது. அந்த நபர் அப்போதே தபால் நிலையத்திற்கு சென்றார். மேலும், மிகவும் ஆச்சரியத்தில் உறைந்தவாறு இந்த பதிலை கொண்டு வந்தார்: அதாவது டேரா இஸ்மாயீல் கானில் எக்ஸ்ட்ரா அஸிஸ்டென்ட் ஆக இருக்கும் அப்துல்லாஹ் கான் என்ற பெயருடைய ஒரு நபர் சிறிது பணத்தை அனுப்பியுள்ளார்.

அந்த (இந்து) நபர் மிகவும் ஆச்சரியத்துடனும், அதியசமடைந்தவாறும், "இந்த விஷயத்தை தங்களுக்கு யார் கூறியது" என்று மீண்டும், மீண்டும் என்னிடம் கேட்டுக் கொண்டிருந்தார். மேலும் அவர் ஆச்சரியத்தில் உறைந்ததற்கான அடையாளங்கள் அவரது முகத்தில் இருந்து வெளிப்பட்டிருந்தன. அப்போது அவரிடம், "மறைவான இரகசியங்களை அறிந்த, மேலும் நாங்கள் எவனை வணங்குகின்றோமோ அந்த இறைவனே கூறினான்" என்று நான் கூறினேன். எப்போதும் தனது இறை வல்லமையையும், இஸ்லாத்தில் உண்மையின் அடையாளங்களையும் வெளிப்படுத்தக் கூடிய அந்த இறைவனை அறியாதவர்களாக இந்து மக்கள் இருப்பதாலும் பொதுவாக இந்துக்களின் பழக்கம் இவ்வாறாக இருக்கின்றது: அதாவது, முதலாவதாக, வல்ல இறைவனின் அற்புதங்களின் அடையாளங்களை நிராகரிக்கின்றனர்; மேலும், மறைவான இரகசியங்கள் குறித்த விஷயங்களை அவர்களுக்கு அறிவிக்கக் கூடிய ஒரு நபர் அவர்களுக்கு கிடைத்து விட்டால் அப்போது ஆச்சரியத்தின் நதியில் மூழ்கி விடுகின்றனர். இதே போன்ற நிலையே லாலா ஷரம்பத்தின் நிலையாக இருந்தது.நான் முன்னர் எழுதியிருந்தது போன்று, அவரது சகோதரர் பிஷம்பர்தாஸ் மற்றும் குஷ்கால் என்ற பெயருடைய மற்றொரு நபரும் ஒரு குற்றத்தால் கைது செய்யப்பட்டிருந்தனர். அப்போது ஷரம்பத்தோ பரிசோதிக்கும் எண்ணத்துடனே அன்றி வேறு ஏதும் கொள்கை ஈடுபாட்டினால் அல்லாமல், இந்த வழக்கின் முடிவு என்னவாக இருக்கும்? என்று என்னிடம் வினவினார். மேலும், துஆ செய்யும்படியும் விண்ணப்பித்தார். அப்போது நான் பல நாட்கள் அவருக்காக துஆ செய்து கொண்டிருந்தேன். இறுதியில், மறைவானவற்றை அறிந்த அந்த இறைவன் இரவு நேரத்தில் மறைவான விஷயத்தை எனக்கு திறந்து கொடுத்தான். அதாவது பிஷம்பர் தாஸுடைய முடிவு என்பது, பிஷம்பர் தாஸ் வழக்கின் முடிவு இவ்வாறாக இருக்கும். அதாவது, பிஷம்பர் தாஸுடைய சிறைத் தண்டையின் பாதி குறைக்கப்பட்டு விடும். உதாரணமாக, நான் எனது ஆன்மிகக் காட்சியின் நிலையில் இவ்வாறு கண்டிருந்தேன். அதாவது அவருடைய சிறையின் நாட்களில் பாதியை நானே எனது எழுதுகோலால் வெட்டி விட்டேன். எனினும், குஷ்ஹால் என்பவருக்கு முழுத் தண்டனையையும் அனுபவிக்க நேரிடும் ; ஒருநாள் கூட குறைக்கப்படாது ; மேலும் பிஷம்பர் தாஸுக்கு பாதி தண்டனை கிடைப்பது என்பது துஆவின் தாக்கத்தால் மட்டுமானதாக இருக்கும். எனினும், இருவரில் எவருமே குற்றமற்றவர் என்று விடுதலை செய்யப்பட மாட்டார்.

இதன் தொடர்ச்சி 9-ம் பக்கம்....

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**கிலாஃபத் அமைப்பின் முக்கியத்துவம் மற்றும் அருட்கள்**

**மேலும் அதனுடன் தொடர்புடைய இறை உதவிகள்**

நாம் கிலாஃபத்துடன் இணைந்திருக்கும் வரை அல்லாஹ்வின் அருட்களுக்கு வாரிசுகளாக ஆகிக் கொண்டிருப்போம்

அஹ்மதிய்யா ஜமாஅத்துடன் இணைந்து அதிலிருந்து அருள் பெற வேண்டும் என்றால், கிலாஃபத்துடன் இணைந்திருப்பதும் ஒவ்வோர் அஹ்மதியின் கடமையாகும். முழுமையாகக் கட்டுப்படுவதும் ஒவ்வோர் அஹ்மதியின் கடமையாகும். காலத்தின் கலீஃபாவின் கட்டளைகளின்படி செயல்படுவதும், அவருடன் நன்றியுணர்விற்கான தொடர்பைக் கொண்டிருப்பதும் கூட, ஒவ்வோர் அஹ்மதியின் கடமையாகும்

இப்பொழுது இன்று உலகில் நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள்! அஹ்மதிய்யா ஜமாஅத் மட்டும்தான் ஓர் அமைப்பில் கோர்க்கப்பட்டுள்ளது

**காலத்தின் கலீஃபாவோ தம்முடைய தொழுகைகளில் இரவுகளில் எழுந்து ஜமாஅத் மக்களுக்காக துஆ செய்கிறார் இவ்வாறு அமல் செய்யும் அரசர் எவரும் இருக்கிறாரா?**

நாம் கிலாஃபத்தின் அருளால் உண்மையான அருளைப் பெற வேண்டுமானால், உண்மையான முறையில் அல்லாஹ்வின் அருள்களுக்கு வாரிசாக வேண்டுமென்றால், நாம் எல்லா விதமான ஷிர்க்கில் இருந்தும் நம்முடைய ஆணவத்தில் இருந்தும் அகம்பாவத்திலிருந்தும் நம்மை விடுவித்துக் கொள்ள வேண்டும்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**

(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 30 மே 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **ஹிஜ்ரத்** மாதம் **30 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

وَاَقْسَمُوْا بِاللّٰهِ جَهْدَ اَيْمَانِهِمْ لَئِنْ اَمَرْتَهُمْ لَيَخْرُجُنَّ ؕ
قُلْ لَّا تُقْسِمُوْا ۚ طَاعَةٌ مَّعْرُوْفَةٌ ؕ
اِنَّ اللّٰهَ خَبِيْرٌۢ بِمَا تَعْمَلُوْنَ ﴿۵۴﴾
قُلْ اَطِيْعُوا اللّٰهَ وَاَطِيْعُوا الرَّسُوْلَ ۚ
فَاِنْ تَوَلَّوْا فَاِنَّمَا عَلَيْهِ
مَا حُمِّلَ وَعَلَيْكُمْ مَّا حُمِّلْتُمْ ؕ
وَاِنْ تُطِيْعُوْهُ تَهْتَدُوْا ؕ
وَمَا عَلَى الرَّسُوْلِ اِلَّا الْبَلٰغُ الْمُبِيْنُ
وَعَدَ اللّٰهُ الَّذِيْنَ اٰمَنُوْا مِنْكُمْ وَعَمِلُوا الصّٰلِحٰتِ
لَيَسْتَخْلِفَنَّهُمْ فِى الْاَرْضِ كَمَا اسْتَخْلَفَ الَّذِيْنَ مِنْ قَبْلِهِمْ ۖ
وَلَيُمَكِّنَنَّ لَهُمْ دِيْنَهُمُ الَّذِى ارْتَضٰى لَهُمْ
وَلَيُبَدِّلَنَّهُمْ مِّنْۢ بَعْدِ خَوْفِهِمْ اَمْنًا ؕ
يَعْبُدُوْنَنِىْ لَا يُشْرِكُوْنَ بِىْ شَيْئًا ؕ
وَمَنْ كَفَرَ بَعْدَ ذٰلِكَ فَاُولٰٓئِكَ هُمُ الْفٰسِقُوْنَ ﴿۵۶﴾
وَاَقِيْمُوا الصَّلٰوةَ وَاٰتُوا الزَّكٰوةَ
وَاَطِيْعُوا الرَّسُوْلَ لَعَلَّكُمْ تُرْحَمُوْنَ ﴿۵۷﴾

(அந்நூர்: 54-57)

அல்லாஹ்வின் அருளால் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் கிலாஃபத் அமைப்பு நிலைபெற்று 117 ஆண்டுகள் ஆகிவிட்டன. இந்த அமைப்பு 1908 இல் நிலைபெற்றது. மேலும் அல்லாஹ்வின் வாக்குறுதிகள் மற்றும் ஹஸ்ரத் நபி பெருமானார் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புகளுக்கு ஏற்பவே நிலைபெற்றது. எனவே அல்லாஹ் முன்னறிவித்த ஓர் அமைப்பின் அங்கமாக நாம் இருப்பது அல்லாஹ் அஹ்மதிய்யா ஜமாஅத் மீது புரிந்துள்ள பேரருளாகும். அதாவது, மஹ்தி மற்றும் மஸீஹ் (அலை) அவர்கள் வருகை தந்த பிறகு எத்தகைய ஒரு காலகட்டம் துவங்கும் என்றால், அது இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்கான காலகட்டமாகும். பிறகு இந்த அமைப்பிலேயே கிலாஃபத்தின் காலகட்டமும் துவங்கும் என்று அல்லாஹ் முன்னறிவித்தான். மேலும், அதைப் பற்றி பெருமானார் (ஸல்) அவர்களும் மிகவும் தெள்ளத் தெளிவாக முன்னறிவிப்பு செய்துள்ளார்கள்.

ஹதீஸில் எடுத்துரைக்கப்பட்டுள்ள ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பு இதுவாகும். அன்னார் (ஸல்) கூறினார்கள்:

அல்லாஹ் நாடும் வரை உங்களில் நபித்துவம் நிலைபெற்றிருக்கும்; பிறகு அல்லாஹ் அதை எடுத்துக் கொள்வான்; பின்னர் நபித்துவத்தின் வழியிலான கிலாஃபத் நிலைபெறும்; பிறகு அல்லாஹ் நாடும் போது அந்த அருட்கொடையையும் எடுத்துக் கொள்வான்; பிறகு அவனது நியதிக்கு ஏற்ப கொடுங்கோல் ஆட்சி நிலைபெறும்; இந்தக் காலகட்டம் முடிவடைந்ததும், இதையும் விடப் பெரிய பலவந்தமான ஆட்சி நிலைபெறும்; அது அல்லாஹ் நாடும் வரை இருக்கும்; பிறகு அல்லாஹ் அதையும் எடுத்துக் கொள்வான்; அதற்குப் பிறகு, மீண்டும் நபித்துவத்தின் வழியிலான கிலாஃபத் நிலைபெறும். மேலும் இதைக் கூறிவிட்டு மாநபி (ஸல்) அவர்கள் மௌனமாகி விட்டார்கள்.

ஆக, இது மாநபி (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பாக இருந்தது. இதன்படி அல்லாஹ்வின் அருளால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வருகை தந்த பிறகு, இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்கான ஒரு புதிய காலகட்டம் துவங்கியது. அன்னாரது மறைவிற்குப் பிறகு, கிலாஃபத் காலகட்டமும் துவங்கியது. நான் ஓதிய இந்த வசனங்களில் அல்லாஹ் கூறுகின்றான். அதன் மொழியாக்கம் இதுவாகும்:

மேலும், நீர் அவர்களுக்குக் கட்டளையிட்டால், உடனே அவர்கள் புறப்பட்டு விடுவதாக அல்லாஹ்வின் மீது உறுதி வாய்ந்த சத்தியங்கள் செய்கின்றனர். நீர் கூறுவீராக! சத்தியங்கள் செய்யாதீர்கள். பொதுவாகக் கட்டுப்பட்டு நடப்பதே போதுமானதாகும். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்வதை நன்கு அறிந்தவன் ஆவான். அல்லாஹ்வுக்கும் கட்டுப்பட்டு நடங்கள். இத்தூதருக்கும் கட்டுப்பட்டு நடங்கள் என்று நீர் கூறுவீராக!

எனவே நீங்கள் புறக்கணித்து விட்டால் அ(த்தூ)வரிடம் ஒப்படைக்கப்பட்டதற்கே அவர் பொறுப்பாளராவார். மேலும் உங்களிடம் ஒப்படைக்கப்பட்டதற்கு நீங்கள் பொறுப்பாளர்களாவீர்கள். நீங்கள் அவருக்குக் கட்டுப்பட்டு நடந்தால் நீங்கள் நேர்வழியினைப் பெறுவீர்கள். இத்தூதரின் பொறுப்பு தூதுச் செய்தியினைத் தெள்ளத் தெளிவாக எடுத்துரைப்பது மட்டுமேயாகும்.

மேலும், அல்லாஹ் உங்களுள் நம்பிக்கை கொண்டு நற்செயலாற்றுபவர்களை அவர்களின் முன்னோர்களை கலீஃபாக ஆக்கியது போன்று, இப்பூமியில் கலீஃபாவாக ஆக்குவதற்காகவும், அவன் அவர்களுக்காக விரும்பிய அவர்களின் மார்க்கத்தை அவர்களுக்கு உறுதிப்படுத்துவதாகவும், அவன் அவர்களுக்கு அவர்களது அச்சத்தின் நிலைக்குப் பிறகு (அதை) அமைதியின் நிலையாக மாற்றுவதாகவும் அவர்களிடம் வாக்குறுதியளித்துள்ளான். அவர்கள் என்னை வணங்குவார்கள். எதனையும் எனக்கு இணையாக்க மாட்டார்கள். இதன் பின்னரும் நிராகரிப்பவர்களே கட்டுப்படாதவர்களாவர். மேலும் நீங்கள் தொழுகையை நிறைவேற்றுங்கள். மேலும் ஸகாத்து கொடுங்கள். மேலும் இத்தூதருக்குக் கட்டுப்பட்டு நடங்கள். அப்போதுதான் உங்கள் மீது கருணை காட்டப்படும்.

உங்களிடம் கிலாஃபத் அமைப்பு

நிலைபெறும் என்று அல்லாஹ் முஸ்லிம்களிடம் வாக்குறுதியளித்துள்ளான் என்பது இந்த வசனங்களிலிருந்து தெளிவாகத் தெரிய வருகிறது. நேர்வழி பெற்ற கலீஃபாக்களின் காலம் 30 ஆண்டுகள் வரை இருந்தது. தற்போது முப்பது ஆண்டுகளுக்கு ஒன்றும் அல்லாஹ்வின் வாக்குறுதி இருக்கவில்லை. மாறாக, இது ஒரு முழுமையான வாக்குறுதியாக இருந்தது. மேலும் , இதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் விளக்கம் அளித்து விட்டார்கள். அது குறித்த ஹதீஸை இப்பொழுது படித்துக் காட்டினேன். அதாவது நபித்துவம் வழியிலான கிலாஃபத் நிலைபெறும். மேலும், இது வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலத்தில் நடைபெறும்.

எனவே அஹ்மதிகளாகிய நாம் நினைவிற் கொள்ள வேண்டிய விஷயம் என்னவென்றால், நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டு அல்லாஹ்வின் கட்டளைகளின்படி அமல் செய்வதாக ஓர் உறுதி எடுத்துள்ளோம். மேலும் நாம் எப்பொழுதும், கிலாஃபத்துடன் இணைந்திருப்போம் என்பது அந்த உறுதிமொழிக்கான ஒரு நிபந்தனை ஆகும். இதன் பக்கமே அல்லாஹ் நமக்கு கவனமூட்டியுள்ளான். வலியுறுத்திக் கூறியிருக்கின்றான் என்றே கூறவேண்டும். அதைப் பற்றி மாநபி (ஸல்) அவர்களின் வழிகாட்டல் உள்ளது.

எனவே நாம் கிலாஃபத்துடன் இணைந்திருக்கும் வரை அல்லாஹ்வின் அருள்களுக்கு வாரிசாகிக் கொண்டே இருப்போம். ஆனால், அதற்கும் நிபந்தனைகள் இருக்கின்றன. அவற்றைப் பற்றி அல்லாஹ் வசனங்களிலும் கூறியுள்ளான். எனவே அந்த நிபந்தனைகளை நிறைவேற்றுவதும் நமக்கு அவசியமாகும். அவற்றைப் பற்றி விளக்குவதற்கும் முன்பு கிலாஃபத் தொடர்வது பற்றி உள்ள ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வழிகாட்டலையும் நான் படிக்கின்றேன்.

அன்னார் (அலை) அல்வஸிய்யத் என்ற நூலில் இவ்வாறு கூறினார்கள்:

இறைவன் இருவிதமான வல்லமையை வெளிப்படுத்துகின்றான். முதலாவதாக, நபிமார்களின் கைகளாலேயே தனது வல்லமையின் கரத்தை காட்டுகின்றான். இரண்டாவதாக, ஒரு நபி மரணிக்கின்ற சமயத்தில் அந்த நபியின் மரணத்திற்கு பின்னர் (அவரை பின்பற்றுபவர்கள்) துன்பங்களை எதிரிடும் நிலை உருவாகின்றது. எதிரிகள் வலுப்பெற்று இப்போது பணி சீர்குலைந்து விட்டது என கருதுகின்றனர். இந்த ஜமாஅத் இனி அழிந்து விடும் என அவர்கள் உறுதியாக நம்புகின்றனர். ஜமாஅத்திலுள்ள மக்களும் சந்தேகத்தில் வீழ்ந்து விடுகின்றனர். அவர்களது இடுப்புகள் முறிந்து விடுகின்றன. பாக்கியமிழந்த பலர் மார்க்கத்தை விட்டு விலகும் வழிகளை மேற்கொண்டு விடுகின்றனர். அப்போது இறைவன் இரண்டாம் முறையாக தனது மகத்தான வல்லமையை வெளிப்படுத்துகின்றான். மேலும் வீழ்ந்து கிடக்கும் ஜமாஅத்தை காப்பாற்றி விடுகின்றான்.

எனவே கடைசி வரை பொறுமையுடன் இருப்பவர் இறைவனின் இந்த அற்புதத்தை காண்கிறார். ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களின் காலத்தில் இவ்வாறே நடந்தது. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணம் ஒரு அகால மரணமாக கருதப்பட்டது. காட்டுவாசிகளான பல அறிவிலிகள் மார்க்கத்தை விட்டு வெளியேறி விட்டார்கள். நபித்தோழர்கள் கூட துக்கத்தின் காரணமாக பைத்தியக்காரனைப் போன்று ஆகிவிட்டார்கள். அப்போது இறைவன் ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களை நியமித்து மீண்டும் தனது வல்லமையின் முன்மாதிரியைக் காட்டினான். இஸ்லாம் அழிந்து கொண்டிருக்கும் வேளையிலேயே அதனை காப்பாற்றி விட்டான்.

وَلَيُمَكِّنَنَّ لَهُمْ دِيْنَهُمُ الَّذِى ارْتَضٰى لَهُمْ

وَلَيُبَدِّلَنَّهُمْ مِّنْ بَعْدِ خَوْفِهِمْ اَمْنًا

(பொருள்: அவன் அவர்களுக்காக விரும்பிய அவர்களின் மார்க்கத்தில் அவர்களை உறுதியாக நிலைநிற்கச் செய்வான். அவர்களது அச்சத்தின் நிலையை மாற்றி அதற்கு பிறகு அமைதியினை வழங்குவான். (24:56)) என்று அல்லாஹ் அவர்களிடம் செய்த அந்த வாக்குறுதியை நிறைவேற்றினான். மேலும் அச்சத்திற்கு பிறகு அவர்களது பாதங்களை உறுதிப்படுத்துவதாக அவன் வாக்குறுதியளித்திருந்தான்.

அவ்வாறே ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுடைய காலத்திலும் நடந்தது. அவர்கள் இஸ்ரவேல் சந்ததிகளை அவர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிக்கேற்ப அவர்களை கொண்டு சேர்க்க வேண்டிய இலக்கை அடைவதற்கு முன்பே எகிப்திற்கும் கன்ஆன் தேசத்திற்கும் இடைப்பட்ட வழியில் சென்று கொண்டிருக்கையில் மரணமடைந்து விட்டார்கள். இஸ்ரவேல் மக்களுக்கு அன்னாருடைய மரணத்தினால் பெரும் துக்கம் ஏற்பட்டது.

ஹஸ்ரத் வாக்ககளிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

எனவே அன்பிற்குரியவர்களே! ஆரம்பத்திலிருந்தே அல்லாஹ்வின் நடைமுறை இதுதான். அவன் எதிரிகளின் இரண்டு பொய்யான மகிழ்ச்சிகளை அழித்துக் காட்டுவதற்காக இரண்டு வல்லமைகளைக் காட்டுகிறான். எனவே இப்போது இறைவன் தனது பழமையான அந்த நடைமுறையை விட்டுவிடுவது சாத்தியமில்லை. எனவே நான் உங்களுக்கு எடுத்துக் கூறியிருக்கின்ற விஷயங்களில் வருத்தப்படாதீர்கள். உங்கள் உள்ளம் கவலை அடைய வேண்டாம். ஏனெனில், அந்த இரண்டாவது வல்லமையைக் காண்பதும் உங்களுக்கு அவசியமாகும். மேலும் அது வருவது உங்களுக்கு சிறந்ததாகும். ஏனெனில் அது நிரந்தரமானதாகும்.

இங்கும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அந்த நபிமொழிக்கு ஏற்பவே ஒரு நிரந்தரமான வல்லமையைக் கோடிட்டு காட்டி விடார்கள்.

அன்னார் (அலை) கூறினார்கள்:

அதன் தொடர் மறுமை வரை அறுந்து விடாது. மேலும், நான் செல்லாத வரை அந்த இரண்டாவது வல்லமை வர முடியாது. ஆனால், நான் சென்று விட்டால் இறைவன் உங்களுக்காக அந்த இரண்டாவது வல்லமையை அனுப்புவான். அது எப்பொழுதும் உங்களுடன் இருக்கும். இறைவனின் வாக்குறுதி பராஹீனே அஹ்மதிய்யாவில் (குறிப்பிடப்பட்டு) உள்ளது. மேலும் அவ்வாக்குறுதி என்னைப் பற்றி அல்ல ;மாறாக உங்களைப் பற்றியதாகும். நான் உம்மை பின்பற்றும் உமது ஜமாஅத்தை மறுமை வரை மற்றவர்களின் மீது மேலோங்கச் செய்வேன் என இறைவன் கூறியுள்ளான்.

எனவே என்னைப் பிரியும் நாள் உங்களுக்கு வரவேண்டியது அவசியமானதாகும். அதற்குப் பிறகு நிரந்தரமான வாக்குறுதிக்கான அந்த நாள் வரும். நமது இறைவன் வாக்குறுதிகளில் உண்மையானவனும், நன்றியுள்ளவனும் உண்மையாளனுமாவான். அவன் வாக்குறுதியளித்த எல்லாவற்றையும் உங்களுக்கு காட்டுவான். இந்த நாட்கள் உலகத்தின் கடைசி நாட்களாகும். பல துன்பங்கள் இறங்கும் காலமாகும். ஆனாலும், இறைவன் தெரிவிக்கின்ற செய்திகள் அனைத்தும் நிறைவேறும் வரை இந்த உலகம் நிலைபெற்றிருக்கும்.

நான் இறைவனிடமிருந்து ஒரு வல்லமையாக வெளிப்பட்டுள்ளேன். நான் இறைவனின் வல்லமையின் தோற்றம் ஆவேன். மேலும், எனக்குப் பிறகு இன்னும் சிலர் தோன்றுவார்கள். அவர்கள் இறைவனின் இரண்டாவது வல்லமையின் தோற்றமாக இருப்பார்கள். எனவே நீங்கள் இறைவனுடைய இரண்டாவது வல்லமையை எதிர்பார்த்தவாறு ஒன்று சேர்ந்திருந்து துஆ செய்து கொண்டிருங்கள். ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு நல்லவர்களின் ஜமாஅத்தும் ஒன்றுகூடி துஆவில் ஈடுபட்டிருக்க வேண்டும். அதன் மூலம் இரண்டாவது வல்லமை விண்ணிலிருந்து இறங்கி உங்கள் இறைவன் எப்படிப்பட்ட வல்லமை மிக்க இறைவன் என்பதை உங்களுக்கு காட்டி விடட்டும்.

(அல் வஸிய்யத் நூல்: பக்கம் 10 -14)

இப்பொழுது இங்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், இரண்டாவது வல்லமைக்காக காத்திருந்தவாறு ஒன்று சேர்ந்து துஆ செய்து கொண்டிருங்கள்; ஒவ்வொரு நாட்டிலும் நல்லவர்களின் ஜமாஅத் ஒன்று சேர்ந்து துஆக்கள் செய்யட்டும்! என்று கூறியுள்ளார்கள். அன்னார் (அலை) இதைக் கூறியபோது, இந்தியாவில் அல்லது ஹிந்துஸ்தானில் அஹ்மதிய்யா ஜமாஅத் இருந்தது. சில மக்கள் வெளியே இருந்திருப்பார்கள். ஆனால், ஒவ்வொரு நாட்டிலும் இவ்வாறு துஆ செய்து கொண்டேயிருங்கள் என்று கூறி அன்னார் (அலை) ஒருவகையில் முன்னறிவிப்பும் செய்து விட்டார்கள். அதாவது எப்படிப்பட்ட எதிர்காலம் வரும் என்றால், அப்பொழுது உலகில் எல்லா இடங்களிலும் அஹ்மதிய்யா ஜமாஅத் பரவிவிடும்!

மேலும், இன்று நாம் அந்தக் காலத்தைப் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். அதாவது உலகத்தில் அஹ்மதிய்யா ஜமாஅத் பரவியிருக்கின்றது. எல்லா இடத்திலும் கிலாஃபத்துடன் நன்றியுணர்வு, அன்பு மற்றும் நேசத்திற்கான தொடர்பு நமக்குத் தென்படுகிறது. அது தொலைதூரத்தில் இருக்கும் நாடுகளில் வாழ்பவர்களிடமும் உள்ளது. மேலும் ஐந்தாவது கிலாஃபத்தின் தேர்தலின்போதும், உலகில் பரவியிருந்த மக்கள் ஒன்று திரண்டு கிலாஃபத் அமைப்புடன் இணைந்திருப்பதற்கான உறுதிமொழியை எவ்வாறு எடுத்துக் கொண்டார்கள்? மேலும் பைஅத் செய்தார்கள்? என்பதை நீங்கள் பார்த்தீர்கள்.

இந்த பைஅத் இனியும் நிலைத்திருக்கும். மக்கள் செய்து கொண்டே இருப்பார்கள். இன்ஷா அல்லாஹ்! மேலும் வருங்காலத்தில் எப்பொழுதும் இதன்படி

அல்லாஹ் தனது அருள்களால் நமக்கு வழங்கிக் கொண்டே இருப்பான். ஏனெனில், இது அல்லாஹ்வின் வாக்குறுதி ஆகும். இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பு ஆகும். இது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் அல்லாஹ்விடமிருந்து செய்தி பெற்று நமக்கு வழங்கிய நற்செய்திக்கான தூதுச் செய்தியாகும்.

எனவே நாம் கிலாஃபத்துடன் இணைந்திருக்க வேண்டும். மேலும் கிலாஃபத் அமைப்பை நிலைநாட்டுவதற்காக எல்லாத் தியாகங்களுக்காகவும் ஆயத்தமாக இருக்க வேண்டும். நாம் இவ்வாறு செய்து கொண்டே இருப்போமாயின், கியாமத் வரை நாம் கிலாஃபத்துடன் இணைந்திருப்போம். நம்முடைய வழித்தோன்றல்கள் இணைந்திருக்கும். மேலும், அதன் அருளிலிருந்து அருள் பெற்றுக் கொண்டே இருப்போம்.

அஹ்மதிய்யா ஜமாஅத்திலும், சில மக்கள் கிலாஃபத் மன்னராட்சியாக மாறிவிடும் என நினைக்கின்றார்கள். ஆனால், ஒரு விஷயம் அல்லாஹ்வின் வாக்குறுதியாக இருக்கின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பு உள்ளது. மேலும், நான் வாசித்த ஹதீஸில் அன்னார் (ஸல்) இவ்வாறு கூறியுள்ளார்கள்:

அதுவும் இதுவேயாகும். மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள். அதிலிருந்து தெரியவருவது என்னவென்றால், அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கிலாஃபத் ஆன்மிக கிலாஃபத்தாக இருக்கும். இன்ஷா அல்லாஹ்! அதன் தொடர் கியாமத் வரை இருக்கும்.

அதில் ஏதும் மன்னராட்சி வந்துவிட்டது போலும்! என்று கூறக் கூடிய அத்தகைய காலகட்டம் எதுவும் வராது. குழப்பம் விளைவிக்கும் மக்கள் சிலர், அஹ்மதிய்யா ஜமாஅத்தில் மன்னராட்சி உருவாகி விட்டது என்று பேசத் துவங்கி விடுகின்றனர். இது ஒருபோதும் நடக்காது. இது அல்லாஹ்வின் வாக்குறுதி ஆகும். எப்போதும் ஆன்மிக கிலாஃபத் நிலைபெற்றிருக்கும். இன்ஷா அல்லாஹ்!

(உங்களுக்கு) முன்னிருந்தவர்களிடம் கிலாஃபத் நிலைபெற்றிருந்ததைப் போன்றே உங்களிடமும் கிலாஃபத் நிலைபெற்றிருக்கும் என்று அல்லாஹ் வாக்குறுதியளித்துள்ளான். அதே போன்று கிலாஃபத் நிலைபெறும். மேலும் அந்த கிலாஃபத் மன்னராட்சியின் கிலாஃபத்தாக இருக்கவில்லை. மாறாக, ஆன்மிக கிலாஃபத்தாக இருந்தது. அதை அல்லாஹ் உதாரணமாகக் கூறியுள்ளான்.

திருக்குர்ஆனில் நபிமார்களின் வரலாற்றில் கூறப்பட்டுள்ளது. அதிலிருந்து நமக்கு இதுவே தெரியவருகிறது. அதாவது, அது அல்லாஹ் நேரடியாக வழங்கி வந்த கிலாஃபத் அமைப்பாக இருந்தது. ஆனால், மற்றோர் அமைப்பும் உள்ளது. அதை அல்லாஹ் உருவாக்கினான். அது நேர்வழி பெற்ற கலீஃபாக்களின் காலத்திலிருந்து துவங்கியது. இப்பொழுது அது மேற்கொண்டு தொடர்கிறது.

ஒருமுறை ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களும் இந்த தலைப்பில் ஒரு கட்டுரை எழுதினார்கள். ஒருகாலத்தில் மன்னராட்சி அமைப்பு வந்துவிடும் என்று அவர்கள் கருதினார்கள். இதைப் பற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களுக்குத் தெரிய வந்தபோது, அன்னார் (ரலி) மிகவும் வன்மையாக அதை மறுத்துக் கூறினார்கள். பெரிதும் மறுத்தார்கள்.

மேலும், அன்னார் (ரலி) கூறினார்கள்:

ஆன்மிகமும், இறையச்சமும் இருக்கும் வரை அஹ்மதிய்யா ஜமாஅத்தில் மன்னராட்சி வராது. இன்ஷா அல்லாஹ்! (அல் ஃபஸ்ல், ஏப்ரல் 13,1952, பக்கம் 3)

மேலும் இது இன்ஷா அல்லாஹ் நிலைபெற்றிருக்கும். அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் அளித்த வாக்குறுதிகள் இருக்கின்றன. அன்னார் (அலை) அதைப் பற்றி தாமே கூறியிருப்பதைப் போன்று **“அந்த வாக்குறுதிகள் நிறைவேறி விடாத வரை அன்னாரது கிலாஃபத்துக்கு இழப்பை ஏற்படுத்தக் கூடிய நஷ்டம் விளைவிக்கக் கூடிய எந்தவோர் அமைப்பும் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் வராது”.**

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் கிலாஃபத்தின் உயர்தரத்தைப் பற்றிய புரிதலைக் கொண்டவர்களாக இருந்தார்கள். மேலும் முழுமையான நன்றியுணர்வுடன் கிலாஃபத்துடன் இணைந்திருந்தார்கள். எனவே அதற்குப் பிறகு அவர்கள் தமது எந்த ஒரு கருத்தையும் வைப்பதற்கான பேச்சுக்கே இடம் இருக்கவில்லை. இன்னும் கூறுவதாயின், அவர்கள் இவ்வாறு கூறி வந்தார்கள்:

ஏதாவது ஒரு விவகாரத்தில் நான் ஏதேனும் கருத்தை கொண்டிருந்து, காலத்தின் கலீஃபா அவர்கள் அதற்கு எதிராகத் தீர்ப்பு வழங்கிவிட்டால், எனக்கு சொந்த கருத்து ஏதும் இருக்கின்றது என்ற சிந்தனை கூட எனது உள்ளத்தில் ஒருபோதும் வந்ததில்லை.

இதுதான் நன்றியுணர்வாக, முழுமையான நன்றியுணர்வாக இருந்தது.

எவ்வாறிருப்பினும், இந்த வகையிலும் நமக்கு அல்லாஹ்வின் வாக்குறுதிகள் மீது உறுதியான நம்பிக்கை இருக்க வேண்டும். கிலாஃபத அமைப்பு, அல்லாஹ்வின் அருளால் எத்தகைய அமைப்பு என்றால், அது அல்லாஹ்வின் விருப்பப்படி நிலைபெற்றது. மேலும் அதற்கேற்ப தொடர்ந்து கொண்டே இருக்கும். எவ்வகையான உலக அரசாட்சியும் அதில் வராது. **காலத்தின் கலீஃபாவோ தம்முடைய தொழுகைகளில், இரவுகளில் எழுந்து ஜமாஅத் மக்களுக்காக துஆ செய்கிறார். இவ்வாறு அமல் செய்யும் அரசர் எவரும் இருக்கிறாரா?**

எனவே இந்த விஷயத்தை நாம் நினைவில் கொண்டால், அதற்கேற்ப அமலும் செய்தால், பிறகுதான் நாம் வெற்றி பெற முடியும். அல்லாஹ்வுக்கும் இத்தூதருக்கும் கட்டுப்பட்டு நடக்கின்ற மக்களுக்கே இது கிடைக்கும் என அல்லாஹ் வாக்குறுதியளித்துள்ளான். எனவே நம்மில் எவர்கள் அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதர் (ஸல்) அவர்களின் கட்டளைகளுக்குக் கட்டுப்பட்டு நடந்து கொண்டே இருப்பார்களோ, அதுவரை நாம் அந்த வாக்குறுதியிலிருந்து பங்கைப் பெற்றுக் கொண்டே இருப்போம். அந்த மக்களும் பங்கைப் பெற்றுக் கொண்டே இருப்பார்கள். இல்லையென்றால், அப்படிப்பட்ட மக்களோ பிரிந்து போய் விடுவார்கள்தான்; ஆனால், இறை வாக்குறுதி ஒருபோதும் அகன்று விடாது. இன்ஷா அல்லாஹ்!

அல்லாஹ்வோ இவ்வாறு கூறியுள்ளான்.

وَاِنْ تُطِيْعُوْهُ تَهْتَدُوْا

அதாவது நீங்கள் கட்டுப்பட்டு நடந்தால் நேர்வழி பெறுவீர்கள். நேர்வழி பெற்றுக் கொண்டே இருப்பீர்கள். பிறகு

وَعَدَ اللّٰهُ الَّذِيْنَ اٰمَنُوْا مِنْكُمْ وَعَمِلُوا الصّٰلِحٰتِ

என்று அல்லாஹ் கூறியுள்ளான்.

وَعَدَ اللّٰهُ الَّذِيْنَ اٰمَنُوْا مِنْكُمْ وَعَمِلُوا الصّٰلِحٰتِ

அதாவது, நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் ஆற்றுபவர்களிடம் அல்லாஹ் இந்த வாக்குறுதியை அளித்துள்ளான்.

ஈமான் மற்றும் நற்செயலாற்றுவதற்கான தரத்தை முதல் வசனத்தில் எடுத்துக் கூறிவிட்டான். முழுமையான கட்டுப்படுதலை நீங்கள் சிரமேற்கொள்ளுங்கள். அப்பொழுதுதான் நீங்கள் உண்மையான நம்பிக்கையாளர் என அழைக்கப்படுவீர்கள். அப்பொழுதுதான் நற்செயல்கள் ஆற்றுவதன் பக்கம் கவனம் பிறக்கும். மேலும், அதில் முன்னேறிக் கொண்டே செல்வதன் பக்கம் கவனம் பிறக்கும். இந்தத் தரம் கிடைக்கப் பெற்று விடும்போது, பிறகு கிலாஃபத்தின் அருளிலிருந்து நாம் பலன் பெற்றுக் கொண்டே செல்வோம்!

ஆக, கிலாஃபத்தை தொடரச் செய்வதற்காக, அதிலிருந்து அருள் பெறுவதற்காக, இந்த கிலாஃபத்துடன் இணைந்திருப்பவர்கள் அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் கட்டுப்பட்டு நடங்கள். மேலும், அவனது கட்டளைகளின்படி அமல் செய்யுங்கள் என்று அல்லாஹ் நமக்குக் வலியுறுத்திக் கூறியுள்ளான். முஸ்லிம்களில் இப்பொழுது எடுத்துக் கொள்ளுங்கள். வரலாறு நமக்குக் கூறுகிறது. மேலும் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஹதீஸ் இருக்கிறது. அதன்படி நாம் இதையே பார்க்கின்றோம். அதாவது முஸ்லிம்களிடம் உண்மையான கிலாஃபத் என்பது நேர்வழி பெற்ற கிலாஃபத் அந்த மக்கள் கட்டுப்படுதலை சிரமேற்கொண்டிருந்த நேரம் வரை நிலைபெற்றிருந்தது. கட்டுப்படுதலை விட்டு வெளியேறியதும் அவர்கள் கிலாஃபத்தை விட்டும் இழப்பிற்குரியவர்களாக ஆகிவிட்டார்கள்.

எனவே இந்த விஷயத்தை எப்பொழுதும் நினைவில் கொள்ள வேண்டும்!

**அஹ்மதிய்யா ஜமாஅத்துடன் இணைந்து அதிலிருந்து அருள் பெற வேண்டும் என்றால், கிலாஃபத்துடன் இணைந்திருப்பதும் ஒவ்வோர் அஹ்மதியின் கடமையாகும். முழுமையாகக் கட்டுப்படுவதும் ஒவ்வோர் அஹ்மதியின் கடமையாகும். காலத்தின் கலீஃபாவின் கட்டளைகளின்படி செயல்படுவதும், அவருடன் நன்றியுணர்விற்கான தொடர்பைக் கொண்டிருப்பதும் கூட, ஒவ்வோர் அஹ்மதியின் கடமையாகும்.** அப்பொழுதுதான் அவர் நேர்வழி பெற்றவராகவும் ஆவார். அப்பொழுதுதான் அவர் அதிலிருந்து அருள்பெற்றுக் கொண்டும் இருப்பார். அதை அல்லாஹ் உண்மையான நம்பிக்கையாளரான, கிலாஃபத்துடன் இணைந்திருப்பவரான நபருக்கு அவசியமானதாக ஆக்கிவிட்டான்.

அல்லாஹ்வின் இந்த கிலாஃபத் அமைப்பு எத்தகைய ஓர் அமைப்பு என்றால், அல்லாஹ் தானே உள்ளங்களைத் திருப்புகிறான். இதுவே இறை ஆதரவு ஆகும். இதனை நாம் எப்பொழுதும் எல்லா கிலாஃபத்தின் காலத்திலும் கண்டுள்ளோம். முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மௌலானா நூருத்தீன் ஸாஹிப் (ரலி) அவர்கள் கலீஃபா எனும் அந்தஸ்தில் அமர்ந்தபோது, அன்னாருடனும் அல்லாஹ்வின் சிறப்பான உதவிகள்

இருந்தன. மக்கள் அன்னாரிடம் பைஅத் செய்தார்கள்.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் காலத்தில் நாம் பார்த்தோம்! குழப்பங்களும், சச்சரவுகளும் இருந்தும் கூட அல்லாஹ்வின் உதவிகள் அன்னாருக்கு இருந்தன. மேலும், இந்த உதவிகள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றக் கூடியவையாக இருந்தன. பிறகு, அஹ்மதிய்யா ஜமாஅத் ஒரு கையில் ஒன்றுசேர்ந்து விட்டது. எவர்கள் கிலாஃபத் அமைப்புக்கு எதிராக இருந்தார்களோ அல்லது இனி கிலாஃபத் தொடர்வதற்கு எதிராக இருந்தார்களோ அவர்கள் பிரிந்து சென்று விட்டார்கள். அவர்களுக்கு எந்த அந்தஸ்தும் இருக்கவில்லை.

பிறகு, மூன்றாவது கிலாஃபத்திலும் எப்படி ஒரு கையில் மக்கள் ஒன்றிணைந்தார்கள் என்பதை நாம் பார்த்தோம்! பிறகு, நான்காவது கிலாஃபத்தில் எப்படி மக்கள் ஒன்றிணைந்தார்கள் என்பதை நாம் பார்த்தோம்! மேலும் எவ்வித தீங்கிழைத்தலும் அவர்களை சிதறிப் போகவிடவில்லை. பிறகு, ஐந்தாவது கிலாஃபத்திலும் மக்கள் எப்படி ஒன்றிணைந்தார்கள். இதைப் பற்றி நான் முன்னரும் பலமுறை கூறியிருக்கின்றேன். இது ஓர் எடுத்துக்காட்டு ஆகும்.எத்தகைய ஓர் எடுத்துக்காட்டு என்றால், அதற்கு இணையான எடுத்துக்காட்டு வேறு எதுவும் இல்லை. வெகு தொலைவில் இருக்கும் மக்கள் ஒன்றிணைந்தார்கள்; மேலும் அவர்கள் எத்தகைய நன்றியுணர்விற்கான தொடர்பை வெளிப்படுத்தினார்கள் என்றால், அதற்கும் எந்த உதாரணமும் கிடைப்பதில்லை.

இப்பொழுது இன்று உலகில் நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள்! அஹ்மதிய்யா ஜமாஅத் மட்டும்தான் ஓர் அமைப்பில் கோர்க்கப்பட்டுள்ளது. அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத்துடன் இணைந்திருப்பதனால், கிலாஃபத்துடன் இணைந்திருப்பதனால் அவர்கள் மீது அல்லாஹ்வின் பேரருள் உள்ளது. எதிரிகள் தரப்பிலிருந்து அஹ்மதிய்யா ஜமாஅத் மீது எண்ணற்ற வெறித்தனமான தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன என்பது சரிதான் ; குறிப்பாக பாகிஸ்தானிலும் மற்ற சில நாடுகளிலும் நிகழ்கின்றது. எனினும், அல்லாஹ்வின் அருளால் அனைவரும் தமது ஈமானில் நிலைபெற்றுள்ளார்கள். அவ்வாறு இருந்தும், இந்த இன்னல்களால் எங்களை எங்களது மார்க்கத்திலிருந்து விலக்கிட முடியாது என்ற விஷயத்தில் நிலைத்திருக்கின்றார்கள். அதற்குப் பதிலாக அல்லாஹ் நம் மீதும், நம் வழித்தோன்றல்கள் மீதும் பொழியச் செய்யும் அருட்கொடை மழைக்கு நிகரே கிடையாது.

பாகிஸ்தானில் எடுத்துக் கொள்ளுங்கள். 1974- இல் ஜமாஅத்துக்கு எதிராக குழப்பம் ஏற்பட்டது. அவ்வாறு இருந்தும் கூட ஜமாஅத் முன்னேறிக் கொண்டே சென்றது. மேலும் உலகத்தில் பரவி விட்டது. 1984-இல் ஜமாஅத்துக்கு எதிராக சட்டங்கள் இயற்றப்பட்டன. அதனால் ஜமாஅத்தின் முன்னேற்றத்தில் எந்தத் தடையும் உருவாகவில்லை.

காலத்தின் கலீஃபா அவர்களுக்கு பாகிஸ்தானில் ரப்வாவில் இருந்து, தலைமையகமான ரப்வாவிலிருந்து வெளியேற நேரிட்டது. ஆனால், ஜமாஅத்தின் முன்னேற்றத்தில் எந்தத் தடையும் உருவாகவில்லை. மாறாக, வெளியேறி ஒரு புதிய மேன்மையுடன் கிலாஃபத்தின் நிழலின் கீழ், கிலாஃபத் மீது அல்லாஹ்வின் அருள்கள் எனும் மழை பொழிந்தவாறு அல்லாஹ்வின் அருள்களை நாம் பார்த்தோம்! ஒரு பதிய காலகட்டம் துவங்கியது.

பிறகு, எவ்வாறு ஜமாஅத் முன்னேற்றம் அடைந்து சென்றது? என்பதை நான்காவது கிலாஃபத் காலகட்டத்தில் நாம் மீண்டும் பார்த்தோம்! இவ்வாறு தற்போதும் ஜமாஅத் முன்னேற்றப் பாதையில் வெற்றி நடை போடுவதை நாம் காண்கிறோம்! எதிரிகள் அநீதியை உச்சத்திற்கு கொண்டு சென்ற பிறகும் கூட இன்றைய நாள்களில் நாம் பார்க்கன்றோம்! குறிப்பாக, 2010-க்குப் பிறகு எதிரிகள் மிகவும் பெரிய அளவில் நம்முடைய பள்ளிவாசல்கள் மீது தாக்குதல் தொடுத்து அஹ்மதிகளை ஷஹீது ஆக்கினார்கள். அதற்குப் பிறகு, அவ்வப்போது ஷஹாதத்கள் நிகழ்கின்றன.சிலவேளை அதிகமாகவும் சிலநேரம் குறைவாகவும் நிகழ்கின்றன. மேலும், ஐந்தாவது கிலாஃபத் காலகட்டத்திலோ எண்ணற்ற ஷஹாதத்துகள் நிகழ்ந்துள்ளன. ஆனால், அவ்வாறு இருந்தும் அல்லாஹ் மக்களின் ஈமானை அசையவிடவில்லை. மக்களுடைய ஈமான் அதிகரிப்பது அல்லாஹ்வின் அருளாகும். அவர்கள் தமது ஈமானில் நிலைத்திருப்பது மட்டுமின்றி, ஈமானில் மிகவும் உறுதியாகிக் கொண்டே செல்கிறார்கள்.

சில மக்கள் பலவீனமான ஈமான் உடையவர்களாக இருப்பார்கள்தான்; சிலர் பின்வாங்கியும் இருப்பார்கள். ஆனால், பெரும்பான்மையினர் தமது ஈமானில் நிலைபெற்றுள்ளார்கள். அல்லாஹ் அவர்களுக்கு வழங்கவும் செய்கிறான். அல்லாஹ் அவர்களுக்கு வேறு வேறு வழியில் வழங்கியிருக்கின்றான். அவர்களுக்கு வெளியே வருவதற்கான வாய்ப்பு கிடைத்து விட்டது. இவ்வாறு அல்லாஹ் உலக ரீதியிலான முன்னேற்ங்களையும் அவர்களுக்கு வழங்கினான்.

இவ்வாறே வெளி உலகில், மற்ற நாடுகளில் அஹ்மதிய்யா ஜமாஅத் மிகவும் அதிகமாக பரவிக் கொண்டே செல்வதை நாம் பார்க்கிறோம். அல்லாஹ்வின் இந்த வாக்குறுதி கிலாஃபத்துக்கு அளிக்கப்பட்டிருந்தது. அதற்கான விளைவுகளாக இன்று வெளிப்படுபவை என்னவென்றால், இன்று நாம் 213,214 நாடுகளில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் அமைப்பை நிலைபெறச் செய்பவர்களாக இருக்கின்றோம். அல்லாஹ்வின் அருளால் கலப்பற்றவர்களின் ஜமாஅத் உருவாகிறது. வெகு தொலைவில் வாழக் கூடிய மக்களைப் பார்த்ததும், எவ்வாறு அவர்களுக்கு கிலாஃபத்துடன் தொடர்பு இருக்கிறது என வியப்பு ஏற்படுகிறது.

நான் முன்னரும் எடுத்துக் கூறியிருக்கிறேன். எவ்வாறு வெகு தொலைவில் இருக்கக் கூடிய ஆஃப்ரிக்க மக்கள், கிராமங்களில் வாழும் மக்கள் கிலாஃபத்துடன் தொடர்பு கொண்டிருப்பவர்கள் இழப்புகள் ஏற்பட்டும் தமது ஈமானில் நிலைத்திருக்கிறார்கள் என்று பற்பல நிகழ்வுகளை எடுத்துக் கூறிக் கொண்டே இருக்கிறேன்.

இப்பொழுது புர்கினாஃபாஸோவில் டோரீ எனும் இடத்தில் 8,9 அஹ்மதிகள் ஷஹீதானார்கள். ஈமானில் உறுதியாக நிலைநின்று அவர்கள் தம்முடைய உயிர்களை அர்ப்பணித்தார்கள். அவர்களுடைய சந்ததிகள், அவர்களுடைய பிள்ளைகள் ஈமானில் நிலைபெற்றுள்ளார்கள்.

எங்களுடைய அந்த ஷஹீதுகள் ஈமான் கொண்டிருந்தது போன்றே நாங்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீது ஈமான் கொண்டுள்ளோம். எவ்வாறு அவர்கள் தம் உயிரை அர்ப்பணித்தார்களோ அவ்வாறே நாங்களும் அர்ப்பணிக்க ஆயத்தமாக உள்ளோம்; நாங்கள் கிலாஃபத்துக்காக, கிலாஃபத் அமைப்பை நிலைபெறச் செய்வதற்காக, எல்லாத் தியாகங்களைச் செய்வதற்கும் ஆயத்தமாக உள்ளோம் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

அந்த மக்கள் எத்தகைய அன்பான தூதுச் செய்தியை எனக்கு அனுப்புகிறார்கள் என்றால், வியப்பு ஏற்படுகிறது. தொலைவில் இருக்கக் கூடிய அந்த மக்கள், எவர்களை நாம் சிலவேளை எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் என நினைக்கிறோமோ, அவர்களிடமும் ஈமானின் எத்தகைய வெப்பம் உள்ளது என்றால், அவர்களுடைய சொற்கள், அவர்களுடைய உணர்வு, அவர்களுடைய பாசம், கிலாஃபத் மீதான அன்பு, நேசம் எடுத்துரைக்க முடியாத, எடுத்துக்காட்டு தர இயலாத ஒரு விஷயமாகும்.

ஆக, நிரந்தரமாக இருக்கும் என்று அல்லாஹ் அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் இந்த வாக்குறுதியை செய்திருந்தான்.இது அல்லாஹ்வின் அருளாகும். அவன் இந்த நிரந்தர அமைப்பை நிலைபெறச் செய்ய வைப்பதற்காக, மக்களின் உள்ளங்களையும் ஈமானால் நிரப்புகிறான். நிரப்பிக் கொண்டே செல்கிறான். நான் ஓர் ஆஃப்ரிக்க நாட்டுக்கு சென்றேன். தோள்பட்டைகள் கூட சரியாக வேலை செய்யாத ஒரு நபர், இயலாதவர் எனக்கு ஸலாம் கூறினார். எவ்வளவு வேகமாக கை குலுக்கினார் என்றால், எனது கை ஏதோ பொறியில் சிக்கிக் கொண்டது போன்று இருந்தது. எவ்வளவு அன்பை வெளிப்படுத்தினார் என்றால், அவருக்கு எவ்வளவு அன்பு இருக்கிறது என்று வியப்பு ஏற்பட்டது. முன்னர் எந்த ஓர் அறிமுகமும் இல்லை. வெறும் கிலாஃபத்தின் அன்பு மட்டும் இருந்தது. பார்த்து மக்கள் கண்ணீர் விட்டு அழத் துவங்கி விடுவார்கள். முன்னர் ஒருபோதும் சந்தித்ததில்லை. எந்த அறிமுகமும் இல்லை.

ஆனால், எப்படி கட்டிப்பிடித்து அழுவார்கள் என்றால், எவ்வாறு அல்லாஹ் அவர்களுடைய உள்ளங்களில் கிலாஃபத்துக்காக அன்பை உருவாக்கி விட்டான்! என வியப்பு ஏற்பட்டு வந்தது. மேலும், நாங்கள் அஹ்மதிய்யா கிலாஃபத்தை நிலைபெறச் செய்வதற்காக எல்லாத் தியாகங்களுக்கும் ஆயத்தமாக உள்ளோம்; இது எங்களுடைய உறுதிமொழி அல்ல ; மாறாக, நாங்கள் அதை நிறைவேற்றிக் காட்டுவோம் என்று அவர்கள் உறுதியளித்து வந்தார்கள்.

ஒவ்வோர் ஆண்டும் எண்ணற்ற மக்கள் எனக்குக் கடிதம் எழுதுகின்றார்கள்: எண்ணற்ற கடிதங்கள் எப்படிப்பட்டவை என்றால், அவற்றில் சிறு பிள்ளைகளிலிருந்து துவங்கி பெண்கள், இளைஞர்கள் மற்றும் முதியவர்கள் வரை அவர்களின் கடிதங்களில் அன்பு வெளிப்படுகின்றதாக இருக்கின்றது. எத்தகைய அன்பின் காட்சிகள் என்றால், அதைப் பார்த்து, அல்லாஹ் அவர்களுடைய உள்ளங்களில் கிலாஃபத்துக்காக, ஜமாஅத்திற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்காக எவ்வாறு அன்பை ஏற்படுத்தியிருக்கின்றான்? மேலும்,

இஸ்லாத்தின் முன்னேற்றத்திற்காக அவர்களுடைய உள்ளங்களில் எவ்வளவு வேதனையை உருவாக்கி விட்டான் என்று மனிதன் வியந்து போகிறான்.

ஆக, இதைத்தான் அல்லாஹ் அஹ்மதிய்யா கிலாஃபத் மூலமாக நிலைபெறச் செய்துள்ளான். மேலும், இதைத் தொடரச் செய்வதற்காக அல்லாஹ் நம்மிடம் இவ்வாறு கூறுகிறான்: நீங்கள் அதில் நிலைபெற்றிருந்தால், நன்மைகளில் நிலைபெற்றிருந்தால், உங்களுடைய அமல்களை நல்லவையாக வைத்திருந்தால், பிறகு அதிலிருந்து பலனே பெற்றுக் கொண்டிருப்பீர்கள்.

அல்லாஹ் இந்த வசனங்களிலேயே இந்த விஷயத்தையும் கூறியுள்ளான். ஈமானில் முன்னேறக் கூடிய அந்த மக்கள் எத்தகையோர் என்றால், அவர்கள் ஒருபோதும் இணை வைப்பதில்லை. எனவே நாம் எப்பொழுதும் எல்லா வகையான ஷிர்க்கில் இருந்து தவிர்ந்திருப்பதும் நமக்கு அவசியமாகும். கடந்த நாள்களில் யூ.கேவின் ஷூராவில் நான் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தியிருந்தேன். அதிலும் நான் இதைத் தான் கூறியிருந்தேன். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் பல்வேறு மேற்கோள்களைக் கொண்டு இந்த விஷயத்தை எடுத்துக் கூறியிருந்தேன். அதாவது நம்முள் நான் என்ற விஷயம் இருக்கிறது என்றால், நம்மிடம் யாரேனும் பொறுப்பாளரிடம், எந்த நபரிடமும் - பொறுப்பாளர்களைப் பார்த்து மட்டும் கூறவில்லை. மாறாக, ஒவ்வோர் அஹ்மதிக்கும் கூறியிருக்கின்றேன் - ஆணவம் இருக்கிறது என்றால் நம்முள் ஷிர்க்கின் கலப்படம் இருக்கிறது.

எனவே நாம் கிலாஃபத்தின் அருளால் உண்மையான அருளைப் பெற வேண்டுமானால், உண்மையான முறையில் அல்லாஹ்வின் அருள்களுக்கு வாரிசாக வேண்டுமென்றால், நாம் எல்லா விதமான ஷிர்க்கில் இருந்தும், நம்முடைய ஆணவத்தில் இருந்தும், அகம்பாவத்திலிருந்தும், நம்மை விடுவித்துக் கொள்ள வேண்டும். அதை விட்டும் நம்மை நாம் தூய்மைப்படுத்த வேண்டும். அத்தகைய பொறுப்பாளர்களும், அத்தகைய பணியாற்றுபவர்களும் அவர்களுடைய அகந்தை முடிவுக்கு வந்து விடும்போதுதான், அவர்களுடைய இறுமாப்பு முடிவுக்கு வந்து விடும்போதுதான், அல்லாஹ்வுக்காக கலப்பற்றவர்களாக அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக பணியாற்றுபவர்களாக இருக்கும்போதுதான், அவர்கள் ஜமாஅத்துக்குப் பயனளிக்கின்ற, உதவுகின்ற மக்களாக ஆக முடியும்.

பிறகு அல்லாஹ் இவ்வாறு கூறியிருக்கின்றான்: இவர்கள் தொழுகையை நிலைநாட்டக் கூடியவர்கள் ஆவார்கள். ஸகாத் செலுத்தக் கூடியவர்கள் ஆவார்கள். பிறகு கூறுகிறான்: அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் முழுமையான முறையில் கட்டுப்படுபவர்கள் ஆவார்கள். இவர்கள் எத்தகையோர் என்றால், அல்லாஹ் இவர்கள் மீது கருணை புரிவான்.

ஆக, அல்லாஹ் இப்பொழுது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாக, இந்த அருட்கொடையின் தொடரை, கிலாஃபத்தின் அருட்கொடையின் தொடரைத் துவக்கியுள்ளான். அதிலிருந்து அருள் பெறுவதற்காக ஒவ்வோர் அஹ்மதியும் அல்லாஹ்வின் இந்தக் கட்டளையை நினைவில் கொள்ள வேண்டும். அதாவது கிலாஃபத்தின் அருளைத் தொடரச் செய்வதற்காக அல்லது கிலாஃபத்திலிருந்து அருள் பெறுவதற்காக முழுமையாக கட்டுப்படுபவர்களுக்குத்தான் அவனுடைய வாக்குறுதி இருக்கிறது. அல்லாஹ்வை வணங்குவதை எப்பொழுதும் முன்னிறுத்துங்கள். ஏனெனில், எப்பொழுதும் அல்லாஹ்வை நினைவுகூர்பவர்கள், அவனை வணங்குபவர்கள்தான் அல்லாஹ்வுக்கு முழுமையாக கட்டுப்படுபவர்கள் ஆவார்கள்.

இறை வணக்கத்திற்கு நாம் அறிந்தது போன்று, அல்லாஹ் நமக்கு மீண்டும், மீண்டும் தொழுகைகளை நிலைநாட்டுங்கள் என்று கட்டளையிட்டுள்ளான். எனவே தொழுகைகளை நிலைநாட்டுவது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விஷயம் ஆகும். அதற்காகத் தன்னை கிலாஃபத்துடன் இணைந்திருக்கக் கூடியவராகக் கருதும், இணைந்திருக்க விரும்பும், மேலும் அதிலிருந்து அருள் பெற விரும்பும் ஒவ்வோர் அஹ்மதியும் இந்த விஷயத்தை முன்னிறுத்த வேண்டும். அதாவது நாம் தொழுகைகளை நிலைநாட்டுவதன் பக்கம் முழு கவனம் செலுத்த வேண்டும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் தொழுகைகளை நிலைநாட்டுவதைப் பற்றி விவரித்தவாறு ஓரிடத்தில் மிகவும் உன்னதமான முறையில் இவ்வாறு கூறியுள்ளார்கள்:

தொழுகையின் சிறந்த அம்சம் ஜுமுஆ ஆகும். அதில் இமாம் குத்பா வாசிக்கிறார். அறிவுரைகளைக் கூறுகிறார். காலத்தின் கலீஃபா உலகின் நிலைமைகளைப் பார்த்தவாறு உலகத்தின் பல்வேறு சமுதாயங்களுக்கு அவ்வப்போது எழக்கூடிய, உருவாகக் கூடிய தேவைகளை முன்னிறுத்தி அறிவுரைகளைக் கூறுகிறார். அதன் மூலமாக சமுதாய ஒற்றுமையும், ஒருமைப்பாடும் உருவாகிறது. காலத்தின் கலீஃபா அனைவரின் திரும்பும் இடத்தையும் ஒரு பக்கமாக வைக்கின்றார்.

அதன் உண்மையான காட்சி நம்முன் இருப்பதை இன்று நாம் பார்க்கிறோம். ஆக, இன்றோ எம்.டி.ஏவின் மூலமாக அல்லாஹ் எத்தகைய அமைப்பை உருவாக்கி விட்டான் என்றால், காலத்தின் கலீஃபாவின் குத்பா உலகத்தின் எல்லா நாட்டிலும், எல்லாப் பகுதியிலும், ஒவ்வொரு நகரத்திலும், ஒவ்வொரு கிராமத்திலும் கேட்கவும் பார்க்கவும்படுகிறது.

காலத்தின் கலீஃபா கூறும் விஷயங்கள் முன்னால் அமர்ந்திருக்கும் மக்களுக்காக மட்டும் இருப்பதில்லை. மாறாக, ஆஃப்ரிக்காவிலிருந்து, துருக்கியிலிருந்து, ரஷ்யா போன்ற நாடுகளிலிருந்து எனக்கு இவ்வாறு பல கடிதங்கள் வருகின்றன :

தாங்கள் கூறுகின்ற விஷயங்கள் எங்களுடைய நிலைமைகளுக்கு ஏற்ப இருப்பதாகத் தெரிகிறது; எங்களுக்கு இதைக் கேட்டு எங்களை சீர்திருத்துவதன் பக்கம் கவனம் பிறக்கிறது. மேலும், உண்மையிலேயே கிலாஃபத் அமைப்பு எத்தகைய ஓர் அமைப்பு என்றால், அது எங்களை ஒற்றை அலகில் பிணைத்துள்ளது என்ற உணர்வு ஏற்படுகிறது.

ஆக, கூறப்படும் விஷயங்கள் பாகிஸ்தானிய சிந்தனை கொண்ட மக்களுக்காக மட்டும் கூறப்படுகின்றது அல்லது ஐரோப்பாவில் சில மக்களுக்காகக் கூறப்படுகிறது என்பதல்ல ; மாறாக, எனக்குக் கடிதங்கள் மூலமாக தெரிய வருவது என்னவென்றால், உலகில் ஒவ்வொரு மூலையிலும், ஒவ்வொரு நாட்டிலும் இருக்கின்ற வழக்கங்களில் ஏதாவது சில விஷயங்கள் அவை ஓரளவுக்கு ஒன்றுபடக் கூடியவையாக இருக்கின்றன. அதன் காரணமாக, மக்களுக்குத் தம்மை சீர்திருத்திக் கொள்வதற்கான வாய்ப்பு கிடைத்து விடுகிறது.

இன்றைய நாட்களில் நான் இஸ்லாமிய வரலாற்றைக் கூறிக் கொண்டிருக்கின்றேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் அம்சங்கள் பற்றிய விஷயங்களைக் கூறிக் கொண்டிருக்கின்றேன். அதிலும் நமக்கு அறிவுரைகளாக இருக்கும் பல விஷயங்கள் வந்து விடுகின்றன. மேலும் மக்கள் அதிலிருந்து பெரிதும் பலன்பெறுகிறார்கள். இது மட்டுமின்றி, அவர்களுக்கு இஸ்லாத்தின் வரலாறு பற்றியும் தெரிய வருகிறது. இஸ்லாத்தின் அடிப்படையான விஷயங்கள் பற்றித் தெரிய வருகிறது. இது தொடர்பாகவே அவர்களுக்கு ஸஹாபா பெருமக்களின் வாழ்க்கை வரலாறு பற்றியும் தெரிய வந்துள்ளது. இது தொடர்பாகவே பல்வேறு தருணங்களில் மாநபி (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரிகள் பற்றியும் தெரிய வருகிறது. சில விஷயங்கள் அவர்களுடைய சுய சீர்திருத்தத்திற்கும் அவர்களுக்குப் பலனளிக்கக் கூடிய வகையில் இருக்கின்றன. மேலும், அதிலிருந்து அவர்கள் பயன் பெறுகிறார்கள். மக்கள் அதை வெளிப்படுத்தவும் செய்கின்றார்கள்.

எனவே இந்த கிலாஃபத்தே அந்த வழிமுறையாகும். அதை அல்லாஹ் நம்மிடம் உருவாக்கியிருக்கின்றான். அதன் மூலமாக அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஓர் அலகு உருவாகி விட்டது. உலகின் 215 நாடுகளில் வாழும் ஒவ்வோர் அஹ்மதியும் ஓர் அலகாகி இந்த அமைப்புடன் இணைந்திருக்கிறார். மேலும், தன்னை சீர்திருத்திக் கொள்ள முயற்சி செய்கிறார்.அல்லாஹ் ஸகாத் செலுத்துமாறும் கட்டளையிட்டுள்ளான். இதுவும் செல்வத்தைத் தூய்மைப்படுத்துவதற்கு மிகவும் அவசியமாகும். உங்களுடைய பொருள்களைத் தூய்மைப்படுத்துங்கள். அதற்காக இது அவசியமாகும். இதில் மற்ற பொருள் தியாகங்களும் இணைந்துள்ளன.

இன்று நாம் பார்க்கிறோம்! அஹ்மதிய்யா ஜமாஅத் மூலமாக மட்டுமே இந்தப் பொருளாதாரத் திட்டம் தொடர்கிறது. காலத்தின் கலீஃபாவுக்குக் கட்டுப்பட்டவாறு உலகில் சந்தா கொடுப்பதன் மூலமாக ஜமாஅத் மக்களின், ஜமாஅத்துகளின் தேவைகள் முழுமையடைகின்றன. ஒரு நாட்டில் குறை இருக்கிறது என்றால், மற்ற நாடுகள் மூலமாக அந்தக் குறை முழுமைப்படுத்தப்படுகிறது. ஆஃப்ரிக்காவில் மக்கள் பெரும் தியாகங்கள் செய்கிறார்கள்தான்; ஆனால், அவர்களுடைய நிலைமை எப்படி இருக்கிறது என்றால், அவர்களுடைய செலவுகள் அவர்களுடைய வரவுகளைக் காட்டிலும் மிகவும் அதிகமானவையாகும். எனவே வெளிநாடுகளிலிருந்து அங்கு தொகை அனுப்ப வேண்டி வருகிறது. அங்கு அதன் மூலமாக பள்ளிக் கூடங்கள், மருத்துவமனைகள், பிரச்சார நிலையங்கள் மற்றும் பள்ளிவாசல்கள் ஆகியவற்றின் அமைப்பு இயங்குகிறது. அங்குள்ள மக்களும், எவ்வாறு அல்லாஹ் நம்மை ஓர் அமைப்பில் வைத்து அதிலிருந்து பலன் பெறுவதற்கு நல்வாய்ப்பு வழங்கியுள்ளான் என்று அதற்குப் பெரிதும் நன்றியுடையவர்களாக இருக்கிறார்கள்.

எதிரிகள் அவர்கள் சென்றடைகின்ற

நாடுகளில்- சில இடங்கள் எப்படிப்பட்ட இடங்கள் என்றால் அங்கு சென்று, "நீங்கள் காதியானியத்தை விட்டு விடுங்கள்; மிர்ஸாயியத் அல்லது அஹ்மதிய்யத்தை விட்டு விடுங்கள்; இந்த அஹ்மதி மக்கள் இஸ்லாத்தின் போதனைப்படி அமல் செய்யக் கூடியவர்கள் அல்ல" என்று அவர்கள் கூறியுள்ளார்கள்.

ஆனால், மக்கள் அவர்களுக்கு, அவர்களிடம் வரும் அந்த அஹ்மதி அல்லாதவர்களுக்கு இந்த பதிலைத்தான் கூறுகிறார்கள்:

இதுவரையோ நீங்கள் எங்களுக்கு எதுவும் கற்றுக் கொடுக்கவில்லை; இன்று அஹ்மதிய்யா ஜமாஅத் வந்துள்ளது. அவர்கள் எங்களுடைய கிராமங்களில் எங்களுடைய சிற்றூர்களில் எங்களுடைய நகரங்களில் பள்ளிவாசல்களையும் கட்டியுள்ளார்கள்; எங்களுடைய கல்வியின் பக்கமும் கவனம் செலுத்தியுள்ளார்கள்; எங்களுக்குப் பள்ளிக் கூடங்களின் வசதியையும் செய்து கொடுத்துள்ளார்கள்; எங்களுக்கு மருத்துவமனைகளையும் கட்டிக் கொடுத்துள்ளார்கள்; எங்களுக்கு மார்க்கத்தையும் கற்றுக் கொடுக்கின்றார்கள்; எங்களுக்குத் திருக்குர்ஆனின் மொழியாக்கத்தைக் கற்றுக் கொடுக்கிறார்கள்; நீங்களோ இதுவரை ஒன்றும் செய்யவில்லை; இன்று நீங்கள் அவர்களை எதிர்க்க வந்து விட்டீர்கள்; இவர்கள் முஸ்லிம்கள் இல்லை என்று கூறுவதற்காக எங்கள் பின்னால் சுற்றிக் கொண்டிருக்கின்றீர்கள்; ''இவர்கள் முஸ்லிம்கள் இல்லை என்றால் பிறகு உலகில் எவரும் முஸ்லிம்கள் இல்லை".

இதுதான் புதிதாக பைஅத் செய்தவர்களின் பதிலாக இருக்கிறது. ஆக, இதுவும் தொடரும் கிலாஃபத் அமைப்பாகும். அதன் மூலமாக அல்லாஹ் மக்களின் உள்ளங்களில் பொருள் தியாகத்துக்கான ஆன்மாவை உருவாக்கியுள்ளான். சந்தாக்கள் மற்றும் ஸகாத் ஆகியவற்றின் மூலமாகவும், பிறகு கிலாஃபத் அமைப்பு மூலமாகவும் அதற்கான ஆகுமான செலவு, உண்மையான செலவு செய்யப்படுகிறது. ஏழைகள் பராமரிக்கவும்படுகிறார்கள். தேவையுடையவர்களின் தேவைகளும் நிறைவேறுகின்றன. மேலும், இஸ்லாத்தைப் பரப்பும் பணியும் நடைபெறுகிறது.

எவ்வாறு இருப்பினும், நான் முன்னரும் கூறியது போன்று,எத்தகைய சில சூழ்நிலைகள் இருக்கின்றன என்றால், அதன் காரணமாக சில கடுமைகளும் ஏற்படுகின்றன. வங்காளதேசம் இருக்கின்றது. அரபு நாடுகளின் சில நாடுகள் இருக்கின்றன. ஆஃப்ரிக்காவில் நாடுகள் இருக்கின்றன. பாகிஸ்தான் உள்ளது. இன்னும் சில இடங்களும் இருக்கின்றன. பாலஸ்தீனத்திலும் இன்றைய நாட்களில் – அங்கு சிறிதளவு அஹ்மதிகள் இருக்கின்றார்கள். பெரும் சிரமத்தில் இருக்கிறார்கள். பொதுவாக அங்கு பாலஸ்தீனத்தின் முழு சமுதாயமே இன்னலில் சிக்கியுள்ளது. அவர்கள் மீது உச்சகட்டமான, கொடூரமான முறையில் மிகவும் மிருகத்தனமாக அநீதியிழைக்கப்படுகிறது. பாலஸ்தீனத்து மக்கள் மீது இழைக்கப்படும் அநீதியிலிருந்து அல்லாஹ் அவர்களுக்கும் விடுதலை அளிப்பானாக! முழுமையான முறையில் அந்த மக்களை இனப்படுகொலை செய்வதுதான் அநீதியாளர்களான அவர்களது முயற்சியாக இருக்கிறது. அவர்கள் அதில் அதை செய்யவும் செய்கின்றார்கள். அல்லாஹ்வே கருணை புரிவானாக!

ஆனால், எவ்வாறாயினும், அஹ்மதிகளாக இருப்பவர்கள் அந்த இன்னல்கள் அனைத்தையும் பார்த்த பிறகும், நம்மிடம் கிலாஃபத் அமைப்பு நிலைபெற்றிருக்கின்றது; அது நமக்கு ஆறுதல் அளிக்கிறது; நம்முடைய தேவைகளையும் நிறைவேற்ற முயற்சி செய்கிறது என்ற விஷயத்திற்காக அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துகிறார்கள்.

உலகில் நாம் பார்க்கின்றோம். இது குறித்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறியுள்ளார்கள்:

பல பேரழிவுகள் வெளிப்படும். சிலவோ இயற்கைச் சீற்றத்தின் காரணமாக, மேலும் அவர்களுடைய அகந்தையின் காரணமாக உலகம் ஒரு குழப்பத்திலும், சச்சரவிலும் மூழ்கியுள்ளது. அதன் காரணமாக போர்கள் நடக்கின்றன. குழப்பங்கள் உருவாகியிருக்கின்றன. அந்த மக்கள் இப்பொழுதும் அல்லாஹ்வின் பக்கம் கவனம் செலுத்தவில்லை என்றால், பிறகு உலகில் ஓர் அழிவு வரவிருக்கின்றது. அதைப் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பலமுறை முன்னறிவித்துள்ளார்கள்.

எனவே கிலாஃபத் அமைப்புடன் இணைந்திருப்பவர்களின் கடமை என்னவென்றால், அவர்கள் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். அதாவது, நாம் உலகையும் அழிவிலிருந்து காப்பாற்ற வேண்டும். உலக அழிவிலிருந்து காப்பாற்றுவதற்கான உறுதியை நாம் எடுத்துக் கொள்ளும்போது, பிறகு அதற்காக முயற்சியும் செய்வோம். மேலும் முயற்சி என்னவென்றால், உலகை அல்லாஹ்வின் பக்கம் கொண்டு வருவதற்கு முழு முயற்சி செய்யுங்கள். தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்காக உங்களால் இயன்ற அளவிலான வழிவகைகளையும், திறமைகளையும் பயன்பாட்டில் கொண்டு வாருங்கள். அதற்காக உயிர், பொருள், நேரம் ஆகியவற்றைத் தியாகம் செய்ய எல்லா நேரமும் ஆயத்தமாக இருங்கள்.

அவ்வாறே நீங்களும் அல்லாஹ்வுடனான உங்கள் தொடர்பை எப்படி அதிகரித்திட வேண்டுமென்றால், அல்லாஹ்வின் சிறப்பான அருள் ஒவ்வோர் அஹ்மதி மீதும் ஏற்பட வேண்டும். அவர் அந்த அருள்கள் காரணமாக அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறக் கூடியவராக இருக்க வேண்டும். நெருக்கத்தைப் பெறக் கூடியவராக இருக்கும்போது, உலகைக் காப்பாற்றக் கூடியவராக இருக்கும் அதே வேளையில் அவர் தன் வழித்தோன்றல்களையும் காப்பாற்றக் கூடியவராக இருப்பார். தன்னையும் பேரழிவுகளிலிருந்து காப்பாற்றிக் கொள்ளக் கூடியவராக இருப்பார். ஏனெனில், இந்தப் பேரழிவுகளும், இந்த நாசங்களும் எவ்வளவு பயங்கரமான வடிவத்தை மேற்கொண்டு கொண்டே செல்கின்றன என்றால், இனி எப்படிப்பட்ட வடிவத்தை அடையுமோ என்று தெரியவில்லை! அதை மனிதன் கற்பனை கூட செய்து பார்க்க முடியாது!

எனவே எப்பொழுதும் நினைவில் கொள்ளுங்கள்! அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் இணைவதிலேயே இப்பொழுது உலகத்தின் நிலை பெற்றிருத்தல் இருக்கின்றது. அஹ்மதிய்யா கிலாஃபத் என்பது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் அளித்த அந்த வாக்குறுதியின் தொடர்ச்சியாகும்; அந்த அமைப்பின் தொடர்ச்சியாகும். அதைப் பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னறிவிப்பு செய்தார்கள். அது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாக தொடர இருந்தது. எனவே அஹ்மதிய்யா கிலாஃபத்தின் இந்த சரடு அல்லாஹ் வரை கொண்டு போய் சேர்க்கின்றது. மேலும் அவனது அமைப்பை நிலை பெறச் செய்வதற்கான ஒரு சரடாக இருக்கின்றது. அதற்காக ஒவ்வோர் அஹ்மதியும் முயற்சி செய்ய வேண்டும். நாம் இதை செய்யும் பொழுதுதான் அல்லாஹ் நம்மைத் தன்னுடைய அருள்களுக்கும் வாரிசுகளாக ஆக்குவான். உலகத்தில் வேறு யார் மீதும் பொழிய முடியாத அருளாக அந்த அருள் இருக்கும்.

இறுதியாக, இப்பொழுது நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஒரு மேற்கோளை எடுத்து வைக்கின்றேன்:

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

இறைவன் உங்களை வீணாக்கி விடுவான் என நீங்கள் கருத வேண்டாம். நீங்கள் இறைவனின் கையால் மண்ணில் விதைக்கப்பட்ட ஒரு விதையாவீர்கள். இந்த விதை முளைக்கும்; பூக்கும்; எல்லா திசையிலும் இதன் கிளைகள் படரும் ; பின்னர் பெரியதொரு மரமாகி விடும் என்று இறைவன் கூறுகிறான். எனவே இறைவனின் கூற்றில் நம்பிக்கை கொண்டு இடையில் வரும் சோதனைகளுக்கு அஞ்சாதவர் அருளுக்குரியவர் ஆவார். ஏனெனில், சோதனைகள் வருவதும் அவசியமானதாகும். தமது பைஅத் வாதத்தில் உண்மையாளர் யார்? பொய்யர் யார்? என உங்களை சோதிக்கவே இறைவன் அவ்வாறு செய்கின்றான்.

ஏதாவது சோதனையில் தடுமாற்றமடைபவன் இறைவனுக்கு எந்த இழப்பையும் ஏற்படுத்த மாட்டான். மேலும் பேறிழந்த நிலை அவனை நரகத்தில் கொண்டு சேர்க்கும். அவன் பிறக்காமல் இருந்திருந்தால் அது அவனுக்கு நன்றாக இருந்திருக்கும். ஆனால், எவர்கள் மீது இன்னல்கள் எனும் நில அதிர்வுகள் வருகின்றனவோ, பேராபத்துகள் எனும் சூறாவளிகள் வீசுகின்றனவோ, சமுதாயங்கள் எவர்களை ஏளனப்படுத்தி, எள்ளிநகையாடுகின்றனவோ, உலகம் அவர்களை மிகவும் அருவருப்பானவர்களாகப் பார்க்கிறதோ, அவர்களே இறுதியில் வெற்றி பெறுவார்கள். அருள்களின் வாசல்கள் அவர்களுக்காக திறக்கப்படும்.

நான் என் ஜமாஅத்திற்குத் தெரிவிக்குமாறு இறைவன் என்னிடம் கூறியுள்ளதாவது, உலகப் பற்று கலவாத, வஞ்சகமோ கோழைத்தனமோ கலவாத, கட்டுப்படுதலின் எத்தகுதியினையும் இழக்காத நம்பிக்கை கொண்டவர்கள் இறைவனின் விருப்பத்திற்குரிய மக்கள் ஆவர்.

மேலும் அவர்களே உண்மையான பாதையில் செல்பவர்கள் என்று இறைவன் கூறுகின்றான்.

எனவே, அல்லாஹ்வின் அருளாகும், நான் கூறியது போன்று உலகத்தின் ஒவ்வொரு மூலையிலும், ஒவ்வொரு

*திருக்குர்ஆனிலிருந்து...*

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

நாட்டிலும் அல்லாஹ் அஹ்மதிய்யா ஜமாஅத்துக்கு, அஹ்மதிய்யா கிலாஃபத்துக்கு எத்தகைய மக்களை வழங்கியுள்ளான் என்றால், அவர்கள் தங்களுடைய தியாகங்களின் தரத்தில் முன்னேறிக் கொண்டே செல்கின்றார்கள். அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் அளித்துள்ள அந்த வாக்குறுதிகள் நிறைவேறுவதை நாம் காண்கின்றோம்!

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:

அல்லாஹ் என்னிடம் இவ்வாறு வாக்குறுதி அளித்தான்: அல்லாஹ் என்னிடம் அளித்துள்ள அனைத்து வாக்குறுதிகளும் நிறைவேறாத வரை இந்த உலகம் முடிவுக்கு வராது. சில எனது வாழ்வில்; சில எனக்குப் பிறகு. அதாவது சில ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாழ்விலும், சில பிறகும் நிறைவேறும்! அல்லாஹ் இன்று வரை அவற்றை நிறைவேற்றிக் கொண்டே இருப்பதை நாம் பார்க்கின்றோம்! கிலாஃபத் அமைப்புடன் இணைந்து இருப்பவர்கள் இதைப் பார்க்கவும் செய்கிறார்கள். இனியும் பார்த்துக் கொண்டே இருப்பார்கள். இன்ஷா அல்லாஹ்!

எனவே நம்மில் ஒவ்வொருவருடைய பணி என்னவெனில், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அல்லாஹ்விடமிருந்து செய்தி பெற்று நமக்கு வழங்கிய நற்செய்திகளிலிருந்து பங்கு பெறுவதற்காக, அல்லாஹ்வின் அருள்களின் வாக்குறுதிகளிலிருந்து அருள் பெறுவதற்காக இறைவனின் மகத்துவத்தை உள்ளங்களில் பதிய வைக்கக் கூடியவர்களாக நாம் ஆக வேண்டும். நமது உள்ளங்களிலும், உலகத்தின் உள்ளங்களிலும், நம்முடைய வழித் தோன்றல்களின் உள்ளங்களிலும், மேலும், செயல் ரீதியாக இறைவனின் ஏகத்துவத்தை வெளிப்படுத்தக் கூடியவர்களாக ஆக வேண்டும். மனித குலத்தோடு உண்மையான அனுதாபம் கொள்ளக் கூடியவர்களாக ஆக வேண்டும்.

உள்ளங்களை காழ்ப்புணர்ச்சி மற்றும் பகையை விட்டும் தூய்மையானவர்களாக ஆக்கக் கூடியவர்களாக ஆக வேண்டும். ஒவ்வொரு நன்மையின் வழியில் அடி எடுத்து வைக்கக் கூடியவர்களாக ஆக வேண்டும். நம்முடைய ஈமானைப் பாதுகாக்கக் கூடியவர்களாக ஆக வேண்டும். முழுமையான கட்டுப்படுதலுக்கான முன்மாதிரியைக் காட்டக் கூடியவர்களாக ஆக வேண்டும். ஈமானில் முன்னேறிக் கொண்டே செல்லக் கூடியவர்களாக ஆக வேண்டும். அப்பொழுதுதான் இறைவனுடைய பார்வையில் நம்முடைய பாதம் நன்மையில் செல்லும் பாதமாக கணக்கிடப்படும்! மேலும், நாம் அவனுடைய வாக்குறுதிகளிலிருந்து பலன் பெறக் கூடியவர்களாக ஆவோம்! அல்லாஹ் நமக்கு அதற்கான நற்பேறை வழங்குவானாக!

நபிமொழியிலிருந்து...

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai (Ameer, Melapalayam)

நம்மில் ஒவ்வொருவரும் அஹ்மதிய்யா கிலாஃபத்தை நிலைபெறச் செய்வதற்காக எல்லாத் தியாகங்களையும் செய்வதற்கு ஆயத்தமாக இருப்போமாக! நாம் பல்வேறு தருணங்களில் எடுத்துக் கொள்ளும் உறுதிமொழிகள் இருக்கின்றன. கிளை அமைப்புகளிலும் இருக்கின்றன. அவற்றின் உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக் கொள்கின்றனர். அவர்கள் அதை நிறைவேற்றக் கூடியவர்களாக இருப்பார்களாக! உலகத்தில் அல்லாஹ்வின் ஏகத்துவத்தின் கொடி எல்லா இடத்திலும் பறப்பதையும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அடிமைத்துவத்தில் மக்கள் கூட்டங்கூட்டமாக வருவதையும், அவர்கள் அல்லாஹ்வுக்கு முழுமையாக கட்டுப்பட்டவர்களைச் சேர்ந்தவர்களாக ஆகுவதற்கு முயற்சி செய்யக் கூடியவர்களாக இருப்பதையும், நாம் காண்கின்ற காலத்தை அல்லாஹ் நம்முடைய வாழ்வில் கொண்டு வருவானாக!

இது நடக்கும் பொழுதுதான் நமக்கு மகிழ்ச்சிக்குரிய நாளான அந்த நாளாக அது இருக்கும். எப்பொழுது நாம் கிலாஃபத்துக்காக அல்லாஹ் அளித்த அந்த வாக்குறுதியின் பரக்கத்துகளால் நாம் பலனடைகின்றோம் என்று கூறுவோமா அந்த நாள்தான் நமக்குப் பெரும் அருளுக்குரிய நாளாக இருக்கும். இந்த நாள்கள்தான் உலகத்தை அழிவிலிருந்து காப்பாற்றக் கூடிய நாள்களாக இருக்கும். அல்லாஹ் நமக்கு நம்மை சீர்திருத்திக் கொள்வதற்கும் நல்வாய்ப்பு வழங்குவானாக! அல்லாஹ்வின் தூதுச் செய்தியை உலகில் எட்ட வைப்பதற்கும் நல்வாய்ப்பு வழங்குவானாக!

தொழுகைக்குப் பிறகு நான் இருவருக்காக ஜனாஸா தொழுகையும் தொழவைப்பேன். முதல் குறிப்பு கர்னல் டாக்டர் பீர் முஹம்மத் முனீர் ஸாஹிப் அவர்களுடையதாகும். இவர்கள் ரப்வாவின் ஃபஸ்லே உமர் மருத்துவமனையின் நிர்வாகியாகவும் இருந்துள்ளார்கள். கடந்த நாட்களில் 85 வயதில் மரணமடைந்து விட்டார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّاۤ اِلَيْهِ رٰجِعُوْنَ

அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்தவராக இருந்தார்கள். 1963 இல் டாக்டர் ஸாஹிப் தாமே பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்தார்கள். இதற்குப் பிறகு, 1967 இல் இவர்கள் வஸிய்யத் செய்து, வஸிய்யத் அமைப்பில் இணைந்துள்ளார்கள். 1991-இல் இவர்களுடைய அமலைப் பார்த்து இவர்களுடைய பெற்றோர்களும் பைஅத் செய்யும் நல்வாய்ப்பு பெற்றார்கள். கர்னல் பீர் முஹம்மத் முனீர் ஸஹிப் அவர்கள் பணி ஓய்வு பெற்ற பிறகு, முல்தான் மாவட்ட துணை அமீராகவும் தொண்டாற்றும் நல்வாய்ப்பு பெற்றார்கள்.

2004-ல் ரப்வாவுக்கு இடம் பெயர்ந்து வந்து விட்டார்கள். பிறகு பணி ஓய்வுக்குப் பிறகு வாழ்வை அர்ப்பணித்தார்கள். ஃபஸ்லே உமர் மருத்துவமனையில் நியமிக்கப்பட்டார்கள். பொது மருத்துவராகத் தொண்டாற்றினார்கள். பின்னர் சில காலங்களுக்குப் பிறகு இவர்கள் ஃபஸ்லே உமர் மருத்துவமனையின் நிர்வாகியாக நியமிக்கப்பட்டார்கள். இந்தப் பொறுப்பில் இவர்கள் 12 ஆண்டுகள் வரை மிகவும் கலப்பற்ற தன்மையுடனும், கடினமாக உழைத்தும், அனுதாபம் கொண்டவாறும் தொண்டாற்றினார்கள். தம்முடைய கடமைகளை நிறைவேற்றினார்கள்.

2017 இல் இவர்களது உடல் நிலை பலவீனத்தின காரணமாக இவர்களுக்கு நிர்வாகி பொறுப்பில் இருந்து ஓய்வு அளிக்கப்பட்டது. ஆனால், மருத்துவராக இவர்கள் மருத்துவமனையில் பிறகு தொண்டாற்றி வந்தார்கள். இ.என்டி துறையில் இவர்கள் பணிபுரிந்தார்கள். வாழ்வை அர்ப்பணித்தவராகவும் ஜமாஅத்திற்காக இவர்கள் ஆற்றிய தொண்டுகள் 19 ஆண்டுகள் ஆகும். இவர்களுடைய துணைவியார் அமத்துல் மாலிக் ஸாஹிபா ஆவார்கள். அவர்கள் ஹஸ்ரத் டாக்டர் மீர் முஹம்மத் இஸமாயீல் அவர்களின் மகள் வழிப் பேத்தி ஆவார்கள்.

அவர்கள் கூறுகிறார்கள்:

மிகவும் பரிவுள்ள தந்தை, கருணையுள்ள கணவர், முழு குடும்பத்துடனும் உறவுகளைப் பேணுபவராக இருந்தார்கள். ஜமாஅத்துடனும், கிலாஃபத்துடனும் பெரும் தொடர்பு இருந்தது. தமது வக்ஃபை மிகவும் நேர்மையுடன் முழுமைப்படுத்த முயற்சி செய்வார்கள். துணைவியார் கூறுகிறார்கள்:

நான் இவர்களுடன் 60 ஆண்டுகள் வாழ்ந்திருக்கிறேன். மிகவும் மென்மையான இயல்புடையவராகவும், அனைவரையும் நன்றாகப் பார்த்துக் கொள்ளக் கூடியவராகவும் இருந்தார்கள். என் பெற்றோர்கள் என் சகோதர, சகோரரிகள் மற்றும் தம் பெற்றோர்கள் ஆகிய அனைவரையும் சரிசமமாகப் பார்த்துக் கொண்டார்கள்.

மனிதம் எல்லாவற்றிலும் முதன்மை வாய்ந்ததாக இருந்தது. வேலை முடித்து தாமதமாக வீட்டுக்கு வருவார்கள். அந்த நேரத்தில் எப்போதாவது அவர்களிடம் வினவினால் அதற்கு, “ மக்களுடைய வேலை ஃபைல்களுடன் இருக்கின்றன ; அவர்கள் நினைக்கும்போது ஃபைல்களை மூடி வைத்து விடலாம்; ஆனால், என்னுடைய வேலை மனிதர்களுடன் இருக்கிறது; நான் அவர்களைக் கையாள்கிறேன்; அவர்களுடைய தேவைகளைக் கருத்தில் கொள்வது எனது கடமையாகும்’’ என்று அவர்கள் கூறுவார்கள்.

துணைவியார் கூறுகிறார்கள்: ஒருநாள் மிகவும் தாமதமாக வீட்டு வந்தார்கள். இன்று ஏன் தாமதமாக வந்துள்ளீர்கள்? என்று கேட்டேன். அதற்கு அவர்கள், ஒரு தூய்மை பணியாளர் - அதாவது மருத்துவமனையைச் சேர்ந்தவர் கூட இல்லை. வேறு எங்கோ வேலை பார்க்கும் துப்புரவு பணியாளர் ஒருவர் - அவருக்கு அறுவை சிகிச்சை இருந்தது. அவரைப் பார்த்துக் கொள்பவர் யாருமே இருக்கவில்லை. எனவே நான் அவரைப் பார்த்துக் கொள்வதற்காக அவரிடம் உட்கார்ந்திருந்தேன் என்று கூறினார்கள்.

தஹஜ்ஜுத் தொழக் கூடியவராகவும், தொழுகை, நோன்பு மற்றும் நஃபில்கள் ஆகியவற்றைக் கடைபிடிப்பவராகவும் இருந்தார்கள். முறையாக நோன்பு வைத்து வந்தார்கள். ஒவ்வொரு வியாழக்கிழமை அன்றும் நோன்பு வைப்பார்கள். நான் முன்னரும் கூறியது போன்று, இவர்களுடைய அமல்களைப் பார்த்தே இவர்களுடைய பெற்றோர்கள் 1991-இல் பைஅத் செய்தார்கள்.

இவர்களுடைய தாயார் கூறிவந்தார்கள்; அஹ்மதிகள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை ஏற்றுக் கொள்வதில்லை ; மிர்ஸா ஸாஹிப் அவர்களை மட்டும்தான் ஏற்றுக் கொள்வார்கள் என்றும் நாங்கள் நினைத்துக் கொண்டிருந்தோம். நவூதுபில்லாஹ்! (அவ்வாறு கூறுவதை விட்டும் நாம் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறோம்).

எனக்கு இந்த விஷயம் பிடிக்கவில்லை. ஆனால், என் மகன் தஹஜ்ஜுத் தொழக் கூடியவராகவும் இருக்கிறார்; தொழுகைகளையும் கடைபிடிக்கிறார் என்பதை நான் பார்த்தபோது, அஹ்மதிகள் தவறானவர்களாக இருக்க முடியாது என்று நான் யோசித்தேன்.

இவ்வாறு இவர்களுடைய சொந்த அமல் இவர்களுடைய பெற்றோர்கள் ஜமாஅத்தில் இணைவதற்குக் காரணமாக அமைந்தது. இவர்கள் தாமே ஆய்வு செய்து பைஅத் செய்திருந்தார்கள். எனவே பெரிதும் அமல் செய்யக் கூடிய அஹ்மதியாக இருந்தார்கள். கிலாஃபத்துடன் பெரும் அன்பும், பற்றுறுதியின் தொடர்பும் இருந்தது. எப்பொழுதும் தம்மை கிலாஃபத்துடன் பிணைத்து வைத்திருந்தார்கள். எந்தவொரு சிரமமான தருணத்திலும் காலத்தின் கலீஃபா அவர்களுக்கு கடிதம் எழுதுவதை எப்பொழுதும் தாமும் கடைபிடித்து வந்தார்கள். மேலும், அவ்வாறு செய்யுமாறு தம் பிள்ளைகளுக்கும் வலியுறுத்தி வந்தார்கள்.

இன்னும் கூறுவதாயின், அவர்கள் எனக்கு இவ்வாறே எழுதியிருந்தார்கள்: தாங்கள் எங்கே அமர்த்தினாலும் சரி! எந்தத் தொண்டில் ஈடுபடுத்தினாலும் சரி! நான் ஆயத்தமாக இருக்கிறேன்.

இவர்கள் பின்விட்டுச் சென்றவர்களில் துணைவியார் மூன்று மகன்கள் மற்றும் பேரன் பேத்திகள் இருக்கிறார்கள். அல்லாஹ் இவர்களுக்குப் பாவமன்னிப்பு வழங்கி, இவர்களோடு கருணையுடன் நடந்து கொள்வானாக!

இரண்டவாது நற்குறிப்பு மதிப்பிற்குரிய சலீமா ஸாஹித் ஸாஹிபா அவர்களுடையதாகும். இவர்கள் தற்போது கனடாவில் முரப்பியாக இருக்கும் ஸமீயுல்லாஹ் ஸாஹித் ஸாஹிப் அவர்களின் துணைவியார் ஆவார்கள். இவர்கள் கடந்த நாட்களில் மரணமடைந்து விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْن

மர்ஹூமா வஸிய்யத் செய்தவராக இருந்தார்கள். பின்விட்டுச் சென்றவர்களில் கணவர் மட்டுமின்றி, ஒரு மகளும், மூன்று மகன்களும் இருக்கிறார்கள். இவர்களின் ஒரு மகன் அத்தாவுல் முஃமின் ஸாஹித் ஸாஹிப் இயக்கத்தின் முரப்பி ஆவார்கள். யூ.கேவின் ஜாமிஆ ஆசிரியர் ஆவார்கள்.

முஃமின் ஸாஹித் ஸாஹிப் எழுதுகிறார்கள்: மிகைப்படுத்தலின்றி, என் தாயார் 60,70 பிள்ளைகளுக்குத் திருக்குர்ஆன் ஓதிக் கொடுத்து வந்தார்கள். இல்லை. முஃமின் ஸாஹித் ஸாஹிப் அவர்களின் தந்தையார் (ஸமீயுல்லாஹ் ஸாஹித் ஸாஹிப்) எழுதியிருக்கின்றார்கள்:

மிகைப்படுத்தலின்றி, இவர்களின் தாயார் 60,70 பிள்ளைகளுக்குத் திருக்குர்ஆன் ஓதிக் கொடுத்து வந்தார்கள். (தாயாரான) அவர்களுடைய மரணத்திற்குப் பிறகு, (துணைவியாரான) மர்ஹூமா அவர்கள், யாரைப் பற்றி நான் கூறுகிறானோ அவர்களும் இந்தப் பணியைத் தொடர்ந்தார்கள்.






திருக்குர்ஆன் ஓதிக் கொடுத்து வந்தார்கள். இன்னும் கூறுவதாயின், அஹ்லே ஹதீஸ் மற்றும் அஹ்லே சுன்னத் மக்கள் பலர், எங்கள் பிள்ளைகளுக்கு இவர்கள்தான் திருக்குர்ஆன் ஓதிக் கொடுத்தார்கள் என்று பகிரங்கமாக ஒப்புதல் கூறிவந்தார்கள்.

அவர்கள் எழுதுகிறார்கள்: நற்பேறு பெற்ற, எளிய இயல்புடைய, நன்றியுணர்வு மிக்க தொண்டாற்றுகின்ற பெண்மணியாக இருந்தார்கள். எப்பொழுதும் மற்றவர்களுக்குத் தொண்டாற்றுவார்கள். தேவையுடையவர்களுக்குத் தம்மைக் காட்டிலும் முதன்மை அளிப்பார்கள்.

இவர்களின் மகன் அத்தாவுல் முஃமின் ஸாஹித் ஸாஹிப் கூறுகிறார்கள்:

நெருக்கடியான சூழ்நிலைகளிலும் கூட தமக்காக செலவு செய்வதற்குப் பதிலாக தேவையுடையவர்களுக்கு உதவி செய்வதற்கு முன்னுரிமை வழங்கி வந்தார்கள். அல்லாஹ் இவர்களுக்குப் பாவமன்னிப்பு வழங்கி இவர்களுடன் கருணையுடன் நடந்து கொள்வானாக!

தமிழாக்கம்<br>மவ்லவி<br>அதாவுல் முஃக்னீ

* * * * * * * *

**1- ம் பக்கத் தொடர்ச்சி....(மல்ஃபூஸாத்)**

வழக்கு மாவட்ட(நீதிமன்ற)த்திற்கு திரும்பி வருவது அவசியமானதாக இருந்தது. மேலும் எடுத்துரைக்கப்பட்ட விஷயங்களே தீர்ப்பாக இருந்தன. எனக்கு இது நினைவிருக்கின்றது: அதாவது இந்த அனைத்தும் நிறைவேறியபோது, ஷரம்பத் ஆச்சரியத்தில் வீழ்ந்து விட்டார். மேலும் எமது இறைவனின் வல்லமைகள் அவரை கடும் ஆச்சரியத்தில் ஆழ்த்தி விட்டது. மேலும், இந்த விஷயங்கள் அனைத்தும் தங்களுடைய நற்பேறின் காரணமாக நிறைவேறியுள்ளது என்று அவர் எனக்கு ஒரு துண்டுச் சீட்டில் எழுதினார். வேதனை என்னவென்றால், இதன் பிறகும் கூட அவர் இஸ்லாத்தின் ஒளியிலிருந்து சற்றும் பயனடையவில்லை. மேலும் இன்றைய நாட்களில் அவர் ஆரியர் ஆவார். மேலும், நேர்வழி என்பது ஒரு பக்கம் இருக்கட்டும்; அவர்கள் உண்மையான சாட்சியம் அளிப்பார்கள் என்ற நம்பிக்கை கூட அந்த நபர்களின் மீது எனக்கு இல்லை. உண்மைக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று வெளிப்படையில் அவர்கள் பிதற்றுகின்றனர். ஆனால் அதன்படி செயல்படுவதில்லை. ஆயினும் நான் நம்பிக்கை கொள்கிறேன்; அதாவது, அதுபோன்ற சாட்சியங்கள் அதாவது ஷரம்பத்திடம் சத்தியம் பெறப்பட்டால், மேலும் சத்தியம் பெறும்போது, பொய் சத்தியம் செய்தால் பிள்ளைகள் மீது அதன் தாக்கம் ஏற்படட்டும் என்று உறுதிமொழி பெறப்பட்டால் பின்னர் நிச்சயமாக உண்மையை கூறுவார். எனது முன்னறிவிப்பிற்கான சாட்சியங்கள் அவரிடம் இருக்கின்றன. தப்பிப்பதற்காக எனக்கு ஞாபகம் இல்லை என்று அவர் கூறிவிடுவது சாத்தியமாகும். ஆனால், சத்தியம் எப்படிப்பட்ட விஷயம் என்றால், நிச்சயமாக அதன் மூலம் நினைவிற்கு வந்து விடும். அவர் பொய் கூறுவார் என்றால், நிச்சயமாக நினைவிற் கொள்ளுங்கள்! எனது இறைவன் அவருக்கு தண்டனை அளிப்பான்; மேலும், இதுவும் ஓர் அடையாளமாக வெளிப்படும். அவர் வெளிப்படையான அடையாளங்களுக்கு சாட்சியாவார். எனது அடையாளங்களுக்கு முஸ்லிம்கள் மட்டுமே சாட்சிகளாக இல்லை. மாறாக உலகில் எந்த அளவிற்கு சமுதாயங்கள் இருக்கின்றனவோ அவர்கள் அனைவரும் எனது அடையாளங்களுக்கு சாட்சிகள் ஆவர். இதற்காக நான் என் வல்லமை மிக்க இறைவனுக்கு நன்றி செலுத்துகிறேன். فالحمد لله علی ذالك

117. ஒருமுறை வாமில் என்ற பெயர் கொண்ட ஓர் ஆரியர் சந்தித்தார். காச நோயால் பாதிக்கப்பட்டிருந்தார். மேலும் (உயிர் பிழைப்பதற்கான அடையாளங்கள் குறைந்து கொண்டே சென்று கொண்டிருந்தன. மேலும், ஒரு விஷப் பாம்பு தன்னை கடித்து விட்டதாக அவர் கனவில் கண்டார். ஒரு நாள் தனது வாழ்க்கையிலிருந்து நிராசையடைந்து என்னிடம் வந்து அழுதார். நான் அவருக்காக துஆ செய்தேன். அப்போது,

قلنا یا نار کونی بردًا وسلامًا

என்று பதில் கிடைத்தது.

பொருள்: நாம் காய்ச்சல் எனும் நெருப்பிடம், நீ குளிர்ந்தும், தணிந்தும் விடு! என்று கூறினோம்.

ஆக, இதன் பிறகு அவர் ஒரு வாரத்தில் நலம் பெற்று விட்டார். மேலும், தற்போது வரை அவர் உயிருடன் இருக்கின்றார். பாருங்கள்; பராஹீனே அஹ்மதிய்யா பக்கம் 227. ஆயினும், அவரது சாட்சியத்திற்கும் கூட சத்தியத்தை பெற வேண்டியது நேரிடும் என்று நம்புகிறேன்.

118. ஒருமுறை நான் குர்தாஸ்பூரில் ஒரு இராணுவ வழக்கின் காரணமாக தங்கியிருந்தேன். (இந்த வழக்கை கரம் தீன் என்பவர் எனக்கு எதிராக தொடர்ந்திருந்தார்). அப்போது எனக்கு இந்த இல்ஹாம் வந்தது:

یسئلونك عن شانك- قل الله ثم ذرهم فی خوضهم یلعبون-

பொருள்: உமது அடையாளம் என்ன? மற்றும் அந்தஸ்து என்ன? என்று உமது அடையாளத்தை குறித்து கேட்பார்கள். கூறுவீராக. அந்த இறைவன் தான் எனக்கு இந்த அந்தஸ்தை வழங்கினான். பின்னர் நீர் அவர்களை அவர்களின் கேளிக்கைகளில் விட்டுவிடுவீராக!

ஆக நான் இந்த இல்ஹாமை குர்தாஸ்பூரில் என்னுடன் இருந்த நாற்பது நபர்களுக்கும் குறைவில்லாத எனது அந்த கூட்டத்தினரிடம் கூறிவிட்டேன். அவர்களில் மவ்லவி முஹம்மது அலீ எம்.ஏ, கவாஜா கமாலுத்தீன் ஸாஹிப் பி.ஏ, ஆகியோரும் இருந்தனர். பின்னர் இதன் பிறகு நாம் நீதிமன்றத்திற்கு சென்றபோது, எதிர்தரப்பின் வழக்குறைஞர், உங்களுடைய கண்ணியமும், அந்தஸ்தும் என்ன? என்ற கேள்விவியையே தர்யாகுல் குலூப் என்ற நூலில் எழுதப்பட்டிருப்பது போன்றே என்னிடம் கேட்டார். ஆம், இறைவனின் அருளால் இதே அந்தஸ்து உள்ளது என்று நான் பதிலாக கூறினேன். அவனே தான் எனக்கு இந்த அந்தஸ்தை வழங்கியுள்ளான்.

அப்போது, இறைவன் புறமிருந்து காலை நேரத்தில் இறங்கியிருந்த அந்த இல்ஹாம் அஸர் நேரத்தில் நிறைவடைந்தது. மேலும் எமது அனைத்து ஜமாஅத்தினரின் ஈமானை அதிகரிப்பதற்கு அது காரணியாக அமைந்தது.

(ஹக்கீக்கத்துல் வஹீ, ரூஹானீ கஸாயீன், தொகுதி 22, பக்கம் 275)

* * * * * * *

# ஜுமுஆ பேருரை

**சமூக ஊடகங்களை சரியாக பயன்படுத்துதல் தொடர்பான பொன்னான அறிவுரைகள்**

**நாம் சமூக ஊடகங்களில் அந்த பதில்களை வழங்குவதற்குப் பதிலாக, அல்லாஹ்வுக்கு முன் குனிந்தால், நம்முடைய தொழுகைகளை நிறுத்தி நிதானமாக நிறைவேற்றினால், அல்லாஹ்வின் தன்மானம் விரைவாகப் பொங்கி எழுகின்ற வகையிலான வேதனையை நம்முடைய ஸஜ்தாக்களில் உருவாக்கினால், பிறகு இந்த மக்கள் தாம் பதில் கூறுவதனால் பெற விரும்புகின்ற அந்த விளைவுகளை விடச் சிறந்த விளைவுகளை, நம்மால் மிக விரைவாகப் பெற முடியும்**

தவறான சொற்களைப் பயன்படுத்துவதோ அல்லது ஏதாவதொரு வகையில் எவரையாவது இழிவுபடுத்துவதற்குக் காரணமாக அமைகின்ற அத்தகைய சொற்களை அறியாமையில் நம்முடைய நாவில் கொண்டு வருவதோ நம்முடைய பணி கிடையாது

பிறகு, அதிலிருந்து பயனடைந்தவாறு எதிரிகள் நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அல்லது ஸஹாபா பெருமக்களை (ரிஸ்வானில்லாஹி அலைஹிம் அஜ்மயீன்) இழிவுபடுத்தக் கூடியவர்கள் என்று கூறிக் கொண்டே இருப்பதற்கு நாம் வழிவகுத்து விடக் கூடாது. நவூதுபில்லாஹ்ஷ

ஒருவர் அஹ்மதியாக இருந்து கொண்டு, ஏதாவது வகையில் தவறான பொருள்படுகின்ற விஷயங்களைப் பேசுகிறார் என்றால், அவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கும், ஜமாஅத்திற்கும் அவப் பெயர் ஏற்படுத்துபவராக இருக்கிறார்

**நீங்கள் பொறுமை காக்க வேண்டும். எப்பொழுதும் பொறுமையை வெளிப்படுத்த வேண்டும்**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 06 ஜூன் 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **இஹ்ஸான்** மாதம் **06 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**


اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

இன்றைய நாள்களில் எங்கு சமூக ஊடகத்தின் பயன் இருக்கின்றதோ, அதிலிருந்து பயன்பெறப்படுகின்றதோ அங்கு வேதனை தரும் சில விஷயங்களும் இருக்கின்றன. எதிரிகள் அதிலிருந்தே பயனடைந்தவாறு அஹ்மதிய்யா ஜமாஅத்துக்கு எதிராக எல்லை கடந்த அபத்தமான பேச்சுகளையும் பேசுகின்றனர். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு எதிராக எப்படிப்பட்ட பொய்களையும், அசுத்தங்களையும் கூறுகின்றார்கள் என்றால், அவற்றைக் கேட்பதனால் அஹ்மதியின் உள்ளம் புண்படுகின்றது.

பிறகு, எதிர் நடவடிக்கையாக சில அஹ்மதிகளும் இவற்றிக்குத் தவறான விதத்தில் பதில் கொடுத்து விடுகிறார்கள். அவர்களுடைய நிய்யத் தூய்மையானதாக இருந்தாலுமே, சிலவேளை, தவறான பொருள் கூட்ட முடிந்த சொற்கள் வந்து விடுகின்றன. இது நம்முடைய வழிமுறையல்ல. இதிலிருந்து ஓர் அஹ்மதி தவிர்ந்திருக்க வேண்டும். தவறான சொற்களைப் பயன்படுத்துவதோ அல்லது ஏதாவதொரு வகையில் எவரையாவது இழிவுபடுத்துவதற்குக் காரணமாக அமைகின்ற அத்தகைய சொற்களை அறியாமையில் நம்முடைய நாவில் கொண்டு வருவதோ நம்முடைய பணி கிடையாது.

பிறகு, அதிலிருந்து பயனடைந்தவாறு எதிரிகள் நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அல்லது ஸஹாபா பெருமக்களை (ரிஸ்வானில்லாஹி அலைஹிம் அஜ்மயீன்) இழிவுபடுத்தக் கூடியவர்கள் என்று கூறிக் கொண்டே இருப்பதற்கு நாம் வழிவகுத்து விடக் கூடாது. நவூதுபில்லாஹ்!

ஆனால், நம்முடைய உள்ளங்களில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கும், ஸஹாபா பெருமக்களுக்கும் இருக்கின்ற உயர் அந்தஸ்தின் கோடியில் ஒரு பங்கு கூட அவர்களின் அறிவிலும், புரிதலிலும் இல்லை. அனைத்தும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அர்ப்பணம்! அன்னார்தான் அல்லாஹ்வுக்கு அன்பிற்குரியவரும் இறுதி நபியுமான அந்த ஃகாத்தமுல் அன்பியா ஆவார்கள். அன்னாருடைய தோழர்களை, ஸஹாபா பெருமக்களைப் பற்றியோ ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எண்ணற்ற இடங்களில் எந்தச் சொற்களைக் எடுத்துக் கூறியுள்ளார்கள் என்றால், எந்த விஷயங்களைக் கூறியுள்ளார்கள் என்றால், அவை நம் எதிரிகள் பேசுபவற்றில் (உள்ள) அவர்களின் சிந்தனைக்கும்




அப்பாற்பட்டவையாகும்.

எனவே மாநபி (ஸல்) அவர்களின் உயர்ப்படித்தரம் மட்டுமே நம்முடைய உள்ளங்களில் இல்லை. இதுவே இருக்கத்தான் செய்கிறது. இது வரையோ எவரும் சென்றடைய முடியாது. அன்னாருடைய ஸஹாபா பெருமக்களுக்கும் நம்முடைய உள்ளங்களில் பெரும் உயர்ப்படித்தரம் உள்ளது. ஒவ்வோர் அஹ்மதியும் இந்த விஷயத்தை முன்னிறுத்த வேண்டும். தவறான தாக்கம் உருவாகின்ற அல்லது ஏதாவது ஒரு விதத்தில் தவறான தாக்கம் உருவாவதற்கு வாய்ப்பு இருக்கின்ற இத்தகைய விஷயங்களைப் பேசுவதை விட்டும் ஒவ்வோர் அஹ்மதியும் தவிர்ந்திருக்க வேண்டும்.

அஹ்மதிகள் சிலர், இந்த பதிலைக் கொடுத்து நாம் பெரும் தன்மானத்தை வெளிப்படுத்தியிருக்கிறோம் என்று நினைக்கின்றார்கள். அவர்களிடம் கேட்கும்போது இதுவே அவர்களுடைய பதிலாக இருக்கிறது. ஆனால், இது பெயரளவிலான தன்மானம் மற்றும் அறிவீனம் ஆகும். ஒருவர் அஹ்மதியாக இருந்து கொண்டு, ஏதாவது வகையில் தவறான பொருள்படுகின்ற விஷயங்களைப் பேசுகிறார் என்றால், அவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கும், ஜமாஅத்திற்கும் அவப் பெயர் ஏற்படுத்துபவராக இருக்கிறார்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

**நீங்கள் பொறுமை காக்க வேண்டும். எப்பொழுதும் பொறுமையை வெளிப்படுத்த வேண்டும்.**

அன்னார் (அலை) ஓரிடத்தில் இவ்வாறு கூறினார்கள்:

இவர்கள் என்னை ஏசுகிறார்கள். ஆனால், நான் அவர்களின் ஏச்சுக்களைப் பொருட்படுத்துவதில்லை. அவர்கள் மீது வேதனையடைவதுமில்லை. ஏனெனில், அவர்கள் இந்தப் போட்டியில் தோற்று விட்டனர். அவர்கள் ஏசி பேசாமல் அவர்களால் தங்களுடைய இந்த ஆதரவற்றத்

தன்மையையும், இயலாமையையும் மறைக்க முடியாது. அவர்கள் கீழ்த்தரமான, தரக்குறைவான ஆயுதத்தைப் பயன்படுத்துகிறார்கள். ஏனெனில்,அவர்களிடம் எந்தச் சான்றும் இல்லை. எந்த பதிலும் இல்லை. எனவே இந்த மக்கள் ஏசி பேச மட்டும் நினைக்கிறார்கள்.

அன்னார் (அலை) கூறுகிறார்கள்: இவர்கள் காஃபிர் ஃபத்வாக்கள் கொடுக்கட்டும். பொய்யான வழக்குகள் தொடரட்டும்! பல்வேறு வகையான இட்டுக்கட்டுதலும் அவதூறும் கூறட்டும்! இவர்கள் தங்களுடைய அனைத்து ஆற்றல்களையும் செயலாற்றச் செய்து என்னை எதிர்க்கட்டும்! பிறகு பார்க்கட்டும்! இறுதித் தீர்ப்பு யாருக்கு சாதகமாக இருக்கிறது என்று!

நீங்கள் என்ன முயற்சி செய்ய வேண்டுமோ செய்து கொள்ளுங்கள். ஆனால், அல்லாஹ் என்னுடன் இருக்கிறான். இறுதித் தீர்ப்போ யாருக்கு சாதகமாக இருக்கிறது என்பது தென்பட்டு விடும்!

அன்னார் (அலை) கூறினார்கள்: நான் அவர்களின் ஏச்சுக்களைப் பொருட்படுத்தினால், இறைவன் என்னிடம் ஒப்படைத்த அசல் பணி பின்தங்கி விடும். எனவே அவர்களின் ஏச்சுக்களைப் பொருட்படுத்தாத அதே வேளையில், நான் எனது ஜமாஅத்திற்குக் கூறும் அறிவுரை என்னவென்றால், அவர்கள் அந்த மக்களுடைய ஏச்சுக்களைக் கேட்டுப் பொறுத்துக் கொள்வது அவர்களுக்குப் பொருத்தமானதாகும். அவர்கள் ஏசிபேசினால், பதிலுக்கு நீங்கள் ஒருபோதும், ஒருபோதும் ஏசிபேசாதீர்கள். ஏனெனில், அதனால் பரக்கத் சென்று கொண்டே இருக்கிறது. (அஹ்மதிகளாகிய) அவர்கள் பொறுமை மற்றும் சகிப்புத்தன்மையின் முன்மாதிரியை வெளிப்படுத்த வேண்டும். தம்முடைய நல்லொழுக்கத்தைக் காட்ட வேண்டும்.

நிச்சயமாக நினைவில் கொள்ளுங்கள்! அறிவுக்கும், ஆவேசத்துக்கும் பயங்கரமான பகைமை உள்ளது. ஆவேசமும், கோபமும் வரும்போது, அறிவு நிலைபெற்றிருக்க முடியாது. ஆனால், எவர் பொறுமை காத்து, சகிப்புத்தன்மைக்கான முன்மாதிரியைக் காட்டுகிறாரோ அவருக்கு ஓர் ஒளி வழங்கப்படுகிறது. அதன் மூலம் அவரது அறிவு மற்றும் சிந்தனையின் ஆற்றல்களில் ஒரு புதிய வெளிச்சம் பிறக்கிறது. பிறகு அந்த ஒளியிலிருந்து ஒளி பிறக்கிறது. சினமும், ஆவேசமும் கொள்ளும் நிலையில் உள்ளமும் மூளையும் இருளடைந்து விடுகின்றது. எனவே இருளிலிருந்து இருள் பிறக்கிறது. (மல்ஃபூஸாத்,தொகுதி 3, பக்கம் 180, 1984-ம் ஆண்டு பதிப்பு)

எனவே இது எப்பொழும் நினைவில் வைக்க வேண்டிய பாடமாகும். மேலும், சில மக்கள் தாமே தம்மை அறிஞர்களாகக் கருதிக் கொண்டு சமூக ஊடகத்தில் பதில் கூறத் துவங்கிவிடுகிறார்கள். அஹ்மதி அல்லாதவர்களின் பெயர் தாங்கி ஆலிம் மக்களின், ஆட்சேபனை செய்பவர்களின் ஆட்சேபனைகளுக்கு பதில் கூறத் துவங்கிவிடுகிறார்கள். அவர்கள் இதிலிருந்து தவிர்ந்து கொள்ள வேண்டும். பதில்கள் தேட வேண்டுமென்றால், (ஜமாஅத்தின்) ஆலிம்களிடம், ஜமாஅத்தின் இலக்கியங்களில் ஆழமான அறிவு கொண்டவர்களிடம் கேட்க வேண்டும். மேலும், அதற்கு எப்படி பதில் அளிக்க வேண்டுமென்றால், அவை உண்மையிலேயே உறுதியானவையாக இருக்க வேண்டும். அந்த மக்களுடைய சான்றுகளை, அவர்களுடைய குற்றச்சாட்டுகளைத் தகர்க்கக் கூடியவையாக இருக்க வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் போதனைப்படி - அது உண்மையில், சரியான இஸ்லாமிய போதனையாகும். அதன்படி - அமல் செய்ய வேண்டும். இல்லையென்றால், நீங்களெல்லாம் ஜமாஅத்தில் இருந்து கொண்டு பிறகு ஜமாஅத்துக்கு அவப் பெயர் ஏற்படுத்துபவர்கள் ஆவீர்கள்.

அல்லாஹ் நம்மைத் தீயவர்களின் தீங்கிலிருந்து பாதுகாப்பானாக! பொய்யான தன்மானத்தைக் காட்டுகின்ற, சிலவேளை தேவையில்லாமல் சில சொற்களைப் பயன்படுத்தி குழப்பத்தையும் சச்சரவையும் பரப்புவதற்கு காரணமாக அமைகின்ற மக்களுக்கும் அறிவை வழங்குவானாக!

நாம் சமூக ஊடகங்களில் அந்த பதில்களை வழங்குவதற்குப் பதிலாக, அல்லாஹ்வுக்கு முன் குனிந்தால், நம்முடைய தொழுகைகளை நிறுத்தி நிதானமாக நிறைவேற்றினால், அல்லாஹ்வின் தன்மானம் விரைவாகப் பொங்கி எழுகின்ற வகையிலான வேதனையை நம்முடைய ஸஜ்தாக்களில் உருவாக்கினால், பிறகு இந்த மக்கள் தாம் பதில் கூறுவதனால் பெற விரும்புகின்ற அந்த விளைவுகளை விடச் சிறந்த விளைவுகளை, நம்மால் மிக விரைவாகப் பெற முடியும். எனவே அஹ்மதி இப்படிக் கூறிவிட்டார்; அப்படிக் கூறிவிட்டார் என்ற தேவையில்லாத வாய்ப்பை எதிரிகளுக்குத் தருகின்ற அத்தகைய விஷயங்களை ஒருபோதும் பேசக் கூடாது. ஒவ்வோர் அஹ்மதியும் இந்த விஷயத்தை விட்டு தவிர்நதிருக்க வேண்டும்.

நம்முடைய நல்லொழுக்கங்களை மிகவும் உயர்வானவையாகவும், மேலானவையாகவும் இருக்க வேண்டும். எவருடைய நல்லொழுக்கங்கள் உயர்ந்தவையில்லையோ அவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத் செய்வததற்கான உரிமையை நிறைவேற்றவில்லை. எனவே நாம் நம்மை ஆய்வு செய்ய வேண்டும். ஒவ்வொருவரும் தம்மை ஆய்வு செய்திடுங்கள். சிந்தியுங்கள். தவறான வகை பதில்கள் அளிப்பதற்குப் பதிலாக துஆக்களின் பக்கம் கவனம் செலுத்துங்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் அதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக! எதிரிகளின் தீங்கினை அவர்கள் மீதே திருப்பிடுவானாக! அதிலிருந்து (நம்மைக்) காப்பாற்றுவானாக!

தமிழாக்கம்
மவ்லவி அதாவுல் முஃக்னீ

* * * * * * *

**12- ம் பக்கத் தொடர்ச்சி (ஹஸ்ரத் நவாப் முஹம்மது அலீ கான் ஸாஹிப் (ரலி) அவர்களின் வாழ்க்கை வரலாறு)**

மிர்ஸா ஷரீஃப் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களின் மனைவி ஆவார்கள். அவர்கள் 19 மே 1893-ல் பிறந்தார்கள். அவர்களுக்கு பிறகு நான்கு மகன்களை அல்லாஹ் வழங்கினான்.

இறை நியதியின் படி 17 பிப்ரவரி 1908-ல் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுடைய மூத்த மகள் ஹஸ்ரத் நவாப் முபாராகா பேகம் ஸாஹிபா அவர்களின் நிக்காஹ் ஹஸ்ரத் முஹம்மது நவாப் அலீ கான் ஸாஹிப் (ரலி) அவர்களுடன் நடைபெற்றது. இந்த நிக்காஹ்வை ஹஸ்ரத் மவ்லவி நூருத்தீன் ஸாஹிப் (ரலி) அவர்கள் நடத்தினார்கள்.ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் மரணத்திற்குப் பிறகு 1909-ம் ஆண்டு மார்ச் 14 அன்று ஹஸ்ரத் நவாப் முபராகா பேகம் ஸாஹிபா (ரலி) அவர்களின் ருக்ஸதானா எனும் மணமகள் வழியனுப்பி வைத்தல் என்ற நிகழ்வு நடைபெற்றது. ஹஸ்ரத் நவாப் ஸாஹிப் (ரலி) அவர்கள் வீட்டிற்கு அன்னார் (ரலி) சென்றார்கள். ஹஸ்ரத் நவாப் ஸாஹிப் அவர்களின் முதல் மனைவியின் ஒரே மகளான ஹஸ்ரத் பூ ஜைனப் (ரலி) அவர்களின் நிக்காஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் அன்பிற்குரியவரான ஹஸ்ரத் மிர்ஸா ஷரீஃப் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களுடன் மே 9, 1909 அன்று நடைபெற்றது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் தமது அருளுக்குரிய வாழ்நாளில் இந்த வரனை முடிவு செய்திருந்தார்கள். ஹஸ்ரத் பூ ஜைனப் பேகம் ஸாஹிபா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் கண்ணியத்திற்குரிய தந்தைவழிப் பாட்டி ஆவார்கள். ஹஸ்ரத் நவாப் ஸாஹிப் (ரலி) அவர்களுக்கும் ஹஸ்ரத் நவாப் முபாரகா பேகம் ஸாஹிபா (ரலி) அவர்களுக்கும் இடையில் 27 வருட வயது வித்தியாசம் இருந்தது என்றாலும் கூட ஹஸ்ரத் நவாப் பேகம் ஸாஹிபா (ரலி) அவர்கள் அறிவு , புரிதல், அன்பு, நன்றி உணர்வு மற்றும் வாழ்வின் முக்கியத்துவம் ஆகியவற்றை புரிந்தவர்களாக இருந்தார்கள். அன்னார் தூய தந்தையின் புனிதமான மகள் ஆவார்கள் என்பதை ஹஸ்ரத் நவாப் (ரலி) அவர்கள் அறிந்திருந்தார்கள். **(தொடரும்....)**

* * * * * * *

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

➢ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➢ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➢ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➢ ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com


GRIZZLY
BE ALWAYS AHEAD
Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com
my grizzly india
my grizzly india
my grizzly india

MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL
MERCHANT
Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 10 Thursday 17 JULY 2025 Issue No.29

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

## ஹஸ்ரத் நவாப் முஹம்மது அலீ கான் ஸாஹிப் (ரலி) அவர்களின் தூய வாழ்க்கை

(ஜனாப் ஸைனுத்தீன் ஸாஹிப் நாஸிம் தாருல் கஸா காதியான்)

காதியான் ஜல்ஸா சொற்பொழிவு-2023

ஹஸ்ரத் நவாப் முஹம்மது அலீ கான் ஸாஹிப் (ரலி) அவர்களின் நற்குறிப்பு

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் கம்பீரம் மிக்க ஸஹாபி ஹஸ்ரத் நவாப் முஹம்மது அலீ கான் ஸாஹிப் (ரலி) அவர்களின் தூய வாழ்க்கை தொடர்பாக சில விஷயங்களைக் நான் கூறுவேன்.

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் அருளுக்குரிய கரங்களில் பைஅத் செய்தவர்களின் வரலாற்றைப் படிக்கும்போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஸஹாபிகளின் அனைத்து பழக்க வழக்கங்களும், நல்ல குணங்களும்,அனைத்து உயர்தரங்களும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் ஸஹாபிகளிடமும் இருந்தது என்று எவ்வித ஐயமுமின்றி தெரிய வருகிறது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் கண்ணியத்திற்குரிய ஸஹாபி ஹஸ்ரத் நவாப் முஹம்மது அலீ கான் ஸாஹிப் (ரலி) அவர்களின் தூய வாழ்க்கையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சில சம்பவங்களை எடுத்து வைக்கின்றேன்.

கண்ணியத்திற்குரிவர்களே! ஹஸ்ரத் நவாப் முஹம்மது அலீ கான் ஸாஹிப் (ரலி) அவர்கள் கண்ணியம் மிகுந்த கௌரி குடும்பத்தைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். அன்னார் மலேர்கோட்லா வட்டாரத்தின் தலைவராவார்கள். அவர்களின் வம்சத்தில் பெயர் போனவரான ஷேக் சதர் ஜஹான் ஸாஹிப் அவர்கள் இறை நெருக்கம் பெற்ற சான்றோராக இருந்தார்கள். ஜலாலாபாத் சர்வாணி சமூகத் தலைவராகவும், நெருக்கம் பெற்ற சான்றோராகவும் இருந்தார்கள். ஹஸ்ரத் நவாப் ஸாஹிப் (ரலி) அவர்களின் தந்தை பெயர் நவாப் குலாம் முஹம்மது கான் ஸாஹிப் (ரலி) ஆகும்.

அன்னார் (ரலி) ஜனவரி 1870-ல் நவாப் பேகம் ஸாஹிபா அவர்களுக்கு மகனாகப் பிறந்தார்கள். அன்னார் தன் தாய்வழியில் முதலாம் நபராகவும், மற்ற சகோதரர்களில் மூன்றாவது நபராகவும் இருந்தார்கள். சிறு வயது முதல் அன்னாருக்கு மார்க்கத்தில் ஆர்வமும், ஈடுபாடும் உருவாகி இருந்தது. ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுடன் நேரடி தொடர்பு ஏற்படுவதற்கு முன் ஹஸ்ரத் நவாப் ஸாஹிபின் குடும்பத்தில் ஒரு கண்ணியமான நபருக்கு நல்ல தொடர்பு ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுடன் உருவாகி இருந்தது. இறுதியில், அது ஹுஸூர் (அலை) அவர்கள் மாலேர்கோட்லா வருகை புரிவதற்கு காரணமாக அமைந்தது.

1884-ல் ஹுஸூர் (அலை) அவர்கள் இந்தப் பயணத்தை மேற்கொண்டதற்கு காரணம் என்னவென்றால்,ஹஸ்ரத் நவாப் இப்ராஹீம் அலீ கான் (ரலி) ஸாஹிப் அவர்கள் பராஹீனே அஹ்மதிய்யாவின் வெளியீட்டில் பங்கு எடுத்திருந்தார்கள். மேலும் அவர்கள் நோய்வாய்ப்பட்ட செய்தி அறிந்து அன்னாருக்காக துஆ செய்வதற்காக வருகை தந்தார்கள். அதன் மூலம் நலம் விசாரித்தல் மற்றும் நன்றி தெரிவிக்கும் செயலின் ஆன்மா தென்பட வேண்டும் என்பது நோக்கமாக இருந்தது.

ஹஸ்ரத் நவாப் (ரலி) அவர்களின் வளர்ப்பு ஆரம்பம் தொட்டு மார்க்க சூழலில் அமைந்திருந்தது. வயதின் ஆரம்பத்தில் அன்னார் (ரலி) தமது ஆசிரியர் மூலம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் பற்றி செவியுற்றிருந்தார்கள். அன்னார் (ரலி) மீது மார்க்கத்தின் பெரும் தாக்கம் ஏற்பட்டிருந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் அந்த நாட்களில் எவ்வித வாதமும் செய்யவில்லை. கொஞ்சம் கொஞ்சமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் செய்தி அன்னாருக்கு கிடைத்துக் கொண்டிருந்தது. ஹஸ்ரத் நவாப் ஸாஹிப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுடன் கடிதத் தொடர்பை 1889-ல் துவங்கி இருந்தார்கள். ஹஸ்ரத் நவாப் முஹம்மது அலீ கான் ஸாஹிப் (ரலி) அவர்கள் 1890-ல் 20-ம் வயதில் தமது வரலாற்று சிறப்பு மிக்க காதியான் பயணத்தை மேற்கொண்டார்கள். ஏனெனில் அப்போது வரை அன்னார் (ரலி) அஹ்மதிய்யத்தின் வட்டத்தில் வந்திருக்கவில்லை. பிறகு சில கேள்விகளுக்கு திருப்திகரமான பதில் கிடைத்த பின்னர் அன்னார் (ரலி) எவ்வித தாமதமும் இன்றி பைஅத்திற்கான கடிதம் எழுதினார்கள். பைஅத் வரிசை பதிவேட்டில் அன்னாரின் வரிசை எண் 210 ஆகவும், பைஅத் தேதி 19 நவம்பர் 1890 என்றும் பதியப்பட்டுள்ளது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் தமது “இஸாலா அவ்ஹாம்” என்ற நூலில் ஹஸ்ரத் நவாப் ஸாஹிப் (ரலி) மற்றும் அன்னாரின் குடும்பம் பற்றி குறிப்பிட்டுள்ளார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நவாப் ஸாஹிப் (ரலி) அவர்களுக்கு எழுதிய தமது கடிதத்தில் சில காலம் ஹுஸூர் (அலை) அவர்களின் அருகில் வந்து தங்குவதற்கு மீண்டும் மீண்டும் வலியுறுத்தினார்கள். எவ்வாறாயினும், இறுதியில் “நீங்கள் வருகை தருவதை நான் எதிர்பார்க்கின்றேன்” என்று ஹுஸூர் (அலை) அவர்கள் ஒரு கடிதத்தில் குறிப்பிட்டு இருந்தார்கள்.

இதற்கு ஏற்ப ஹஸ்ரத் நவாப் ஸாஹிப் (ரலி) இந்த ஜல்ஸாவில் பங்கெடுத்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் கவனம், பரிவு மற்றும் துஆவின் காரணமாக அல்லாஹ் தன் அருளால் ஹஸ்ரத் நவாப் ஸாஹிப் (ரலி) அவர்களுக்கு அனைத்து சிரமங்களையும் எளிதாக்கிக் கொடுத்தான். மேலும் மன திருப்தியுடன் காதியானிற்கு ஹிஜ்ரத் செய்வதற்கான வாய்ப்பை வழங்கினான். பின்னர் அன்னார் (ரலி) தமது முழுமையடையாத இரு அறைகளில் வந்து தங்கினார்கள். அது அத்தார் (எனும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் வீடு) உடன் இணைந்திருந்தது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் பரிவு அவ்வப்போது வெளிப்பட்டு வந்தது. ஹுஸூர் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நவாப் ஸாஹிப் அவர்களை காதியானில் வீடு கட்டுவதற்கு பலமுறை கூறியுள்ளார்கள். இறைவன் அன்னாரின் வீடுகளில் அதிக பரக்கத்தை வழங்கியிருந்தான். ஹஸ்ரத் நவாப் ஸாஹிப் (ரலி) அவர்களின் முதல் மனைவியின் மூலம் இரண்டு மகள்கள் இருந்தனர். அவர்களில் ஒருவர் அமத்துஸ் ஸலாம் ஆவார். அன்னார் சில மாதத்திற்கு பிறகு மரணித்து விட்டார். இரண்டாவது மகள் ஹஸ்ரத் பூ ஜைனப் பேகம் ஸாஹிபா (ரலி) அவர்கள் ஹஸ்ரத்

இதன் தொடர்ச்சி. 11-ம் பக்கம் ......

**National Watch Company**

**Sales & Service**



**B. Mohamed Adil**

93632 06679
99433 38000

**196, Trichy Road, Sulur - 641 402.**
**Somanur, Anuparpalayam, Karumathampatti.**

O.A. NIJAM
99947 57172

**O.A.N. Doors & Steels**

V.A. SAIT
99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

**5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,**
**{ opp. Karuna Clinic } Tirunelveli-627005**

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad